1055

Reg.No.M2147.

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects.*

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR
No.
20 NOV 1928
MADRAS

Vol. XI
புத்தகம் XI

1928-ம் ௵ நவம்பர் ௴ 16௨
விபவ ௵ கார்த்திகை ௴ 1௨

No. 8
பிரதி 8

| CONTENTS | Page |
|---|---|
| The Silk Cotton | 171 |
| Goa Fruit Cultivation | 174 |
| Correspondence | 179 |
| Some Common ailments In Cattle | 184 |
| Raising water by Mhote by 2 men without cattle | 187 |
| News & Notes | 194 |
| Almanack | 197 |

பொருளடக்கம்

| | |
|---|---|
| இலவம் பஞ்சுமரம் | 171 |
| கொய்யாப் பழச்சாகுபடி | 174 |
| கடிதம் | 179 |
| மாடுகளுக்கு உண்டாகும் சில சாதாரண வியாதிகள் | 184 |
| மாடின்றி 2 நபர் கைகளால் சுற்றி யிரைவையாகும் கமலை சால் 2 அமைத்த முறை | 187 |
| குறிப்புகள் | 194 |
| பஞ்சாங்கம் | 197 |

Editor, Rao Bahadur J Chelvaanga Raju

"Jaganndha Baugh" Saidapet.

Annual Subscription including Postage Re One only

Copy Right] [Registered

## கவனியுங்கள்

விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானல் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இந்திரிய வஸ்துக்களடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் எலும்புத்தூள், ஐவ்வு, கோம்பு சீவல், புண்ணுக்குகள் முதலிய சகலமான எருக்களையும் அந்தந்த பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக அட்டகாசப்படுத்தி விற்கும் செயற்கைஉரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு நிலவளமும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், மாசத்திற்கு மாசம் வருஷத்திற்கு வருஷம் அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமேயில்லை.

விலை முதலிய விரங்களறிய விரும்புவோர்:—

ஏ.ஜெ. ரோட்ரிக்ஸ் அண்ட் கோ.

ஏஜண்ட் கடம்பூர் எருக்கிடங்கு

கடம்பூர் (S. I.R )

*என்று எழுதி முழு விவரங்களறியலாம்.*

---

# "ஜெய ரங்கன்"

## J.R. ரங்க ராஜு

**அவர்களால்எழுதப்படும் புதுநாவல். அச்சிலிருக்கிறது கூடிய ஜல்தியில் வெளிவரும். விலை ரூ ஒன்று தான்**

---

## கம்மபாலன்

*தமிழ் மாதப் பதிப்பு*

*தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.*

*ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தகபாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.*

R. வெங்கடசாமி நாயுடு,

*பத்திராதிபர் கம்மபாலன்*

*திருத்தாங்கல்*

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects.*

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| Vol. XI<br>புத்தகம் XI | 1928-ம் வருஷம் நவம்பர் மீ 16 உ<br>விபவ வருஷம் கார்த்திகை மீ 1 உ | No. 8<br>பிரதி 8 |


## THE SILK COTTON.

Continued from Page 86 of No. 4 of Vol. XI

## இலவம் பஞ்சுப் பயிர்

11வது வாலம் 4-ம் நெ. 86-வது பக்கத் தொடர்ச்சி.

இலவம் பஞ்சுமரங்கள் மார்கழி, தை, மாசிமீங்களில் புஷ்பித்து சித்திரை மாதம் முதல் ஆனிமீ முடிய காய்கள் முற்றி வெடிக்கும். மழையில்லாத காலமாகையால் சாதாரணமாய் தானாகவே காய்கள் நீர் வற்றிக் காய்ந்து உதிரும். உதிர உதிர பொறுக்கி எடுப்பது வழக்கம். வெயில் காலத்தில் விசேஷ மழைகள் பெய்தால் அப்போது உதிர்வது சற்று கஷ்டம். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் பதத்தில் அறுத்து விடுவது நலம். இலவமரத்தின் கிளைகள் பலமில்லாதவைகளாதலால் ஆள்கள் அதன்மேல் ஏறி அறுப்பது அபாயமாகும். உயரமாயிருக்கும் மரங்களில் ஏணி வைத்து அறுப்பது நலம். இலவம் பஞ்சுக்காய்கள் காய்ந்து தோல் சுருங்கியவுடன் அறுத்துவிட்டால் தான் நல்லது. இல்லாவிட்டால் காய்கள் வெடித்து மரத்திலிருந்தபடியே பஞ்சு பறந்து போய் நஷ்டமடையும். காய்கள் முன்பின்னாய் முற்றுமாகையால் எல்லாக் காய்களையும் ஒன்றாய் அறுத்துவிடக்கூடாது. ஏனென்றால் முற்றாத காய்களில் பஞ்சு சரியான வர்ணம் கொடாததோடு பஞ்சும் உபகாரப்படாமற் போய்விடும்.

அறுத்த காய்களை களத்தில் இரண்டு மூன்று நாட்களுக்குக் காயப்போட வேண்டும்.

இலவம் பஞ்சுக்காய் 100 இராத்தல் இருந்தால் அதில் மேல் தோல் சுமார் 42 பாகமும் விதை 23 பாகமும் பஞ்சு சக்கை 18 பாகமும் பஞ்சு 17 பாகமும்தான் இருக்கிறது.

## மாசூல் தயாரிக்கும் விதம்

காய்கள் காய்ந்தவுடன் தட்டி; பஞ்சு, கொட்டை, சக்கை, தோல் முதலியவைகளை வெவ்வேறாக எடுக்க வேண்டும். பின்பு பஞ்சு வெட்டியால் அடிக்க வேண்டும், பஞ்சுவெட்டி தயார் செய்யும் வேலை சாதாரணமாகப் பெண்களும், குழந்தைகளும்கூடச் சுலபமாய்ச் செய்யலாம். கொஞ்சமாய்க் காய்களிருந்தால் கையினாலேயே செய்து விடலாம். நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் வைத்து வேலை செய்யும்போது இயந்திரங்களால் தான் இவ்வேலை செய்ய சாத்யமாகும்.

ஜல்லடைக் கண்கள்போல் அமைந்துள்ள நார்கட்டில்களில் போட்டு பஞ்சுவெட்டியால் வெட்டிய பஞ்சைப்போட்டு கொம்புகளால் அடித்தால் கொட்டைகளெல்லாம் ஜல்லடைக் கண்களின் வழியாய் கீழே விழுந்துவிடும். ஜல்லடைமேல் நிற்கும் பஞ்சை மாத்திரம் எடுத்து விட்டு இன்னுமோர் முறை இன்னும் சற்று சிறு துவாரமாயிருக்கும் நார் ஜல்லடைக் கட்டிலில் போட்டு அடித்தால் விதைகளெல்லாம் கொட்டிப்போகும். அப்பால் மூட்டைகளாகவோ பேல்களாகவோ கட்டி விடலாம்.

இலவம் பஞ்சு அறைக்கும் இயந்திரங்களிலெல்லாம் சிறிய இயந்திரத்திற்கு பிளேமெஷின் என்று பெயர். இந்த இயந்திரம் மணி ஒன்றுக்கு ஒருபாரம் அல்லது 500 ராத்தல் இலவம் பஞ்சை அறைக்கும். இது ஒரு குதிரை ஓட்டமுள்ளது.

இதைவிட பல பெரிய இயந்திரங்களுமிருக்கின்றன. அவைகளுக்கு பெக்கர்மெஷின் என்றும், லேயம்ருமெஷின் என்றும், பிரெஞ்ச் மெஷின் என்றும் இன்னும் பலவகை மெஷின்களிருக்கின்றன.

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்பொழுது தரவாரியாய் 4, 5 தினுசுகளாகப் பிரித்துத் தரத்திற்கேற்றவாறு முதல் தரம் இரண்டாந்தரம் மூன்றாந்தரம் நாலாந்தரம் ஐந்தாந்தரம் என அனுப்பப் படுகிறது.

பஞ்சு அதிக இலேசான வஸ்துவாதலால் அதை பிரசில்வைத்து அமுக்கிக் கட்டினாலொழிய அதிக இடம் கொள்ளும். ஆகையால் அதை அமுக்கி பேல் கட்டுவது அவசியம். ஆனால் இலவம் பஞ்சை அம்மாதிரி அமுக்கிக் கட்டினால் பஞ்சின் குணம் கெட்டுப்போகும்.

ஆகையால் இலவம் பஞ்சை சாதாரண பஞ்சை இறுக்கிக்கட்டும் அளவுக்கு அமுக்கிக்கட்டக்கூடாது.

## இலவம் பஞ்சின் உபயோகங்கள்

இலேசான மெத்தைகள், தலையணைகள் செய்யவும், சோபா, நாற்காலி மெத்தை முதலியவற்றிற்கும், வண்டிகளின் பக்கங்களில் தைக்க சாய்மானங்களுக்கும் உதவுகிறது. கப்பலிலிருந்து எவராவது விழுந்து விட்டால் அவர்கள் சமுத்திரத் தண்ணீரில் அமுங்கிப்போகாதபடி பிடித்துக் கொண்டால் தண்ணீரில் மூழ்காமலிருக்கும் உயிர்காப்பாற்றும் சக்கரம் போன்ற வட்டமான தலையணைகளுக்கு இலவம் பஞ்சை மத்தியில் வைத்து தைத்து செய்யப்படுகிறது. அவைகள் இலேசாய் இருப்பதால் அவைகளைப் பிடித்துக் கொண்ட மனிதர் நீந்தாமலே சமுத்திரத்தில் மிதக்கக்கூடும். இவைகள் செய்யவும் உபகாரமாயிருக்கிறது.

## இலவம் பருத்திக் கொட்டையின் உபயோகம்

இலவம் பஞ்சுக் கொட்டையிலிருந்து டச் ஈஸ்ட் இண்டீஸ்காரர்கள் 15 லட்சம் ரூபாய் பெறுமான சுமார் 1600 டன் இடையுள்ள இலவம் பருத்திக் கொட்டைகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

இலவம் பஞ்சுக் கொட்டையிலிருந்து வடிக்கும் எண்ணெய் பலகாரங்கள் செய்வதற்கும், சோப்புகள் செய்வதற்கும் உபகாரப்படும்.

## இலவம்பஞ்சுப் புண்ணாக்கு

எண்ணெய் வடித்தபின் மீதும புண்ணாக்கை சாப்பிடக்கூடிய வஸ்துக்களாய்ச் செய்து வெவ்வேறு பேர்களுடன் அனுப்பி நல்ல இலாபம் பெறுகிறார்களாம். இது உரத்திற்கும் அதிக உபயோகமானது. 100 இராத்தல் புண்ணாக்கில் நாலரை ராத்தல் உப்பு வாய்வு சத்தும் ஒன்றரை ராத்தல் பாஸ்பராமில சத்தும் 1 ராத்தல் சாம்பல்காரமும் இருப்பதாகத் தெரிகிறது.

சுமார் 8, 10 வயதுடைய இலவம் பஞ்சு மரங்கள் 1 ஏக்கர் விஸ்தீரணத்தில் உற்பத்தி செய்தால் சுமார் 800 முதல் 900 ராத்தல் பஞ்சும் சுமார் அரை டன் பருத்திக் கொட்டையும் வரும், இந்த அரை டன் பருத்திக் கொட்டையிலிருந்து வரும் புண்ணாக்கின் விலை மாத்திரம் சுமார் 30 ரூபாய் கிடைக்கும்.

செடிகள் வைத்த 3வது வருஷம் முதல் ஐந்தாவது வருஷம் வரை சராசரியில் மரம் ஒன்றுக்கு 100 காய்களும், 5வது 6வது

வருஷங்களில் மரம் ஒன்றுக்கு 200 காய்களும், 7-வது 8வது வருஷங்களில் சுமார் 400 காய்களும், அதற்குப்பின் சராசரி மரம் 1க்கு சுமார் 600 காய்களும் தோப்பு ரீதியில் வைத்ததில்கண்டு முதலானதாகத் தெரிகிறது.

இலவம் பருத்திக் கொட்டை இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் விசேஷமாய் வாங்கப்படுகிறது.

1927ம் வருடம் மட்டும் இலங்கையிலிருந்து சுமார் இரண்டரை கோடி ரூபாய் மதிப்புள்ள இலவம் பஞ்சு ஏற்றுமதியானதாகத் தெரிகிறது.

இந்தியாவில் இப்பயிர் விசேஷமாய் செய்யப்பட்டால் சுமார் 20 கோடி ரூபாய் வரை விற்கக் கூடிய சாதனங்களிருக்கின்றன.

இவ்வளவு இலாபகரமான பயிரை சாதாரண இறவை சாதனமுள்ள இடங்களில் பயிர் செய்யாமலிருப்பது அறியாமையாலேயேயன்றி வேறல்ல. இனிமேலாவது நமது சந்தா நேயரிற் பலர் இவ்வளவு இலாபகரமான பயிரைச் செய்து தக்கஇலாபம் பெறுவார்களென நம்புகிறோம்.

இப்பயிரின் நோய்களைப்பற்றி இன்னொருமுறை தெரிவிப்போம்.

## The Goa Fruit Cultivation

### கொய்யாப் பழச் சாகுபடி

நமது சந்தாதாரர்களிற் சிலர் இலாபந்தரக்கூடிய பழவகைகளைப் பற்றி எழுதும்படி வேண்டிக் கொள்கிறார்கள்; அதிக செலவில்லாமலும் அதிக தண்ணீர் பாய்ச்சலில்லாமலும் விளைவிக்கக்கூடிய கொய்யாப் பழச் சாகுபடியைப்பற்றி எழுதுகிறோம்.

இதற்குத் தெலுங்கில் ஜாமபண்டு என்றும்இந்துஸ்தானியில் ஜாம்பல் அல்லது பியாரா' அஞ்சீர் என்றும், இங்கிலீஷில் கோவா என்றும் லாட்டினில் சிடியம்கோவா என்றும் கொய்யாப் பழத்திற்கு பெயர். இதுவும் மாதுளை, பன்னீர்ப்பழம், ஜபபுஷ்பழம் முதலியவைகளும் மிர்டேசி யினத்தைச் சேர்ந்தவைகள். வாசனைத் திரவியங்களுள் லவங்கம் என்னும் கிராம்பும் கொய்யா இனத்தைச் சேர்ந்தது. இவற்றின் இலைகள் கூட வாசனையாயிருக்கும்.

கொய்யாவின் தாய்நாடு இந்தியா தேசம். சிலர் தென்னமெரிக்காவே இதற்குச் சுயநாடு என்று சொல்லுகிறார்கள். இது தவறெனஹாட் என்னும் சிறந்த ஆங்கிலேய தாவர சாஸ்திரி சொல்லுகிறார்.

இதில் முக்கியமான ஜாதிகள் இரண்டு. பழம் உள்ளே சிவப்பாயிருக்கும் தினுசு ஒன்று, பழம் உள்ளே வெளுத்திருக்கும தினுசு மற்றொன்று. சில பழங்கள் காம்பண்டை சற்று நீண்டும், மற்றவைகள் எலுமிச்சங்கனி போல் உருண்டு மிருக்கும். இவற்றுள் வெள்ளைச் சதையுள்ள ஒட்டுக்கனிகளே நல்லவை. விதைகள் குறைவு. தித்திப்பு அதிகம், இனிய வாசனையுள்ளது.

கொய்யா ஓர் முரட்டு ஜாதிச்செடி. இந்தியாவில் நீலகிரி முதலிய உயர்ந்த மலைகள் நீங்கலாக மற்ற எல்லா இடங்களிலும், எல்லாவித நிலங்களிலும், சுலபமாய்ப் பயிராகும். இவைகளை வீட்டுப் புழக்கடைகளிலும், பள்ளிக்கூடத்தோட்டங்களிலும்,வயல்களின் ஓரங்களிலும், வளர்க்கலாம். சீதோஷ்ண நிலை மாறுபாடுகள் இம்மரத்திற்கு அதிகக் கெடுதி செய்வதில்லை. ஆனால் இவைகள் நீர் தேங்கும் சதுப்பு நிலங்களில் நன்றாய் வளரமாட்டா.

இந்தியாவில அலகபாத் ஜில்லாவில்விளையும்வெள்ளைச்சதையுள்ள ஒட்டுக் கொய்யாப்பழமே மற்றெல்லாக் கொய்யாப்பழங்களைக் காட்டிலும் சிறந்ததென ஐரோப்பியரும் இந்தியரும் ஒன்று சேர்ந்து புகழ்கிறார்கள். தஞ்சாவூரில் கிடைக்கும் பெரிய ஜாதி கொய்யாப்பழங்களும் உருவத்திலும், ருசியிலும், வாசனையிலும், சதைப்பற்றி விதை குறைந்திருப்பதிலும், காசி, அலகபாத் பழங்களுக்குத் தோற்றவையல்ல. கர்னூல் பட்டினத்தில் அதிகமாய் விளையும் பதியம் போட்டுப் பயிர் செய்யும் (பால்போன்றது என்னும் பெயர் கொள்ளும்,) ‘துதியா’ என்னும் வெள்ளைச் சதைப்பழமும் தஞ்சாவூர் பழம்போல்இருக்கும். பூனா தார்வார் முதலிய இடங்களில் நல்ல கொய்யாப் பழம் கிடைக்கும். ஆனால் பெங்களூரில் கிடைக்கும் உயர்ந்த கொய்யாப்பழங்களைப்போல் இந்தியாவில வேறெங்குமில்லை. அதிலும் சற்றேறக்குறைய விதையே இல்லாத சிறு தேங்காய் அவ்வளவு பெரிய ஓர் வெள்ளைச்சதைக் கொய்யாவானது பர்ஷியா, காபூல் முதலிய சிறந்த பழங்களுள்ள நாடுகளில்கூட கிடைப்பது அரிது என்னலாம். ஆகவே கொய்யாத் தோட்டம் வைக்க விரும்புவோர் பெங்களூரிலிருந்து வெள்ளைக் கொய்யா ஒட்டுச்செடிகள் வருவித்து நடவேண்டும். கல்கத்தாவிலும், பெங்களூரிலும் விதையில்லாத ஒட்டுக் கொய்யாச் செடிகள் விற்பதாய் சிலர் விளம்பரம் செய்கிறார்கள். மற்றும் அலகபாத் காசி, தஞ்சாவூர், விசாகப்பட்டணம், முதலிய ஊர்களிலிருந்தும் ஒட்டுச் செடிகளையும் பழங்களையும் வாங்கி விருத்தி செய்யலாம்.

கொய்யா ஜாதிகளிலெல்லாம், கோவா, சினு முதலிய சில இடங்களில் வளரும் ஸ்ட்ராபெரி கோவா அல்லது சோடாஸ்ப்ரிஆம் என்னும் ஓர் ஊதா வர்ணக் கொய்யா மிகச் சிறந்ததெனஎல்லா ஐரோப்பிய புத்தகங்களிலும் புகழ்ந்து கூறுகிறார்கள். இதன் பழம் ஓர் சிறிய எலுமிச்சம்பழம் அளவுதான் இருக்குமாம். பழம் கிளாரெட் சாராய வர்ணமாம். மணத்திலும் ருசியிலும் சொல்லதற்கரிய ஒப்புயர்வற்றது. சோவா ஜெல்லி என்னும் பழம் பாகு செய்ய இதுவே சிரேஷ்டமாம். இதற்கு லாட்டீனில் ஸிடியம் கடிலியானம் என்று பெயர். சில வர்த்தகருக்கு அனுப்ப எழுதும்போது லாடின் பேரையும் எழுதவேண்டும். நீலகிரி முதலிய இடங்களிலும் தனிட்டுக் கொய்யாப்பழம் என்று ஒரு காட்டுஜாதி உண்டு. அதன் பழம் சிறியது. கொஞ்சம் மஞ்சளாயிருக்கும். தித்திப்புக் குறைவு. ஆனால் இதன் ரசத்திலிருந்து செய்யும் பாகு சீமை இலந்தை என்னும் ஆப்பிள் பழத்தின் பாகைப்போல் சற்றே இருக்குமாம். இது கீழ் நாடுகளில் விளைவதில்லை. இதை ஹில்கோவா என்றும் "ஹில்கூஸ்பெரி" என்றும் சொல்லுகிறார்கள்.

1. விதைகளை நட்டு வளர்க்கலாம். விதைகளை மழைகாலத்தில் பழத்திலிருந்து புதிதாய் எடுத்து உலருமுன்னமே நாற்றங்கால்களில் நடவேண்டும். வெயிற்காலத்தில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

சுமார் 3 வருஷம் வளர்ந்தபிறகு செழுமையாய் வளர்ந்திருக்கும் நல்ல செடிகளைப் பொறுக்கி எடுத்து தோட்டங்களில் கவனமாய் நடவேண்டும். நட்ட 2—3 வருஷங்கழித்து இவ்விதைச் செடிகள் காய்க்க ஆரம்பிக்கும். டிஸ்பீட் என்பவர் விதை போட்டு 3 வருஷம் கழித்ததுமே காய்க்குமென அவர் புத்தகத்தில் கூறுகிறார். பல்லாரி, கர்நூல் முதலிய இடங்களிலும் நல்ல தோட்டங்களில் நான்காம் வருஷமே காய்க்க ஆரம்பிக்கிறது. மழைகாலத்தில் விதையை நடவேண்டும், நாற்றுகளையும் மழைகாலத்தில் தைமாதம் வரையில் நடலாம். நட்ட 3 வருஷங்கள் வரை கேவு நகாய்கறிமுதலிய ஊடு பயிர்செய்யலாம்.

2. கிளைகளைப் பதியம்போட்டுச் செடிகள் உண்டாக்கலாம். ஆவணி மாதம் முதல் தைமாதம்வரை பதியம்போடலாம்.

3. மாமரத்தை ஒட்டுப் போடுவதுபோல் கொய்யாச் செடிகளையும் ஒட்டுப் போடலாம். அதையும் மழைகாலத்திலேயே செய்ய வேண்டும்.

4. கொய்யாச் செடிகளின் கீழே வேரைச்சுற்றிலும் சிறு கொய்யாச் செடிகள் கிளைத்து முளைக்கும், அவைகளை 'சக்கர்ஸ்' என்று சொல்லுவார்கள். இச் செடிகளைச் ஜாக்கிரதையாய் வேருடன் தோண்டி எடுத்தும் நடலாம்.

இந்தியா முழுவதிலும் பெரிய கொய்யாத் தோட்டங்கள் வைத்துப் பயிர் செய்கிறார்கள். கொய்யாப்பழத்திற்கு அந்தந்த ஊர்களின் பக்கங்களிலுள்ள பட்டணங்களிலேயே நல்ல கிராக்கி உண்டு.

கொய்யாச் செடிகளை 15 அடிக்கு ஒன்று வீதம் ஏக்கருக்குச் சுமார் 200 செடிகளை நடலாம். குழி தோண்டுமுன் நிலத்தை நன்றாய் உழுது மேடுபள்ளமில்லாமல் சமனாக்கிச் சுத்தப்படுத்தவேண்டும். பிறகு 2, 3 அடி ஆழம், 2 அடி அகலம், 2 அடி உயரம் உள்ள குழிகளை 15 அடி தூரத்துக்கு ஒன்று வீதம் வெட்டவேண்டும். வெட்டினதும் 5 மாதம் காய்ந்து ஆறவிடவேண்டும். இக்குழிகளில் செடிகளை நடுங்காலத்தில் ஒரு பங்கு மண்ணும், குப்பை எரு சாணம் செம்மண் ஆட்டுப் புழுக்கை கலந்தவை ஒரு பங்குமாகக் கலந்து குழிகளை நிறப்ப வேண்டும். எல்லாப் பழச்செடிகளுக்கும் செய்வதுபோல் இதற்கும் ஒவ்வொரு குழியிலும் சுமார் ஒரு வீசை எலும்புத்துண்டுகளைப் போடவேண்டும். கார்த்திகை மார்கழி மாத முதல் மாசிமாதம் வரையில் செடிகளை நடலாம்.

கொய்யாத் தோட்டங்களுக்கு மழையில்லாத காலங்களில் வாரத்திற்கொருமுறையாகிலும் நீர் பாய்ச்சவேண்டும். அன்றியும் ஒவ்வொரு வருஷமும் ஆடி மாதத்திலாவது காய்த்து ஓய்ந்தபிறகு தை, மாசி மாதங்களிலாகிலும், செடியைச் சுற்றிலும் ஒரு அடி ஆழம் வெட்டி மண்ணை எடுத்து ஒரு கூடை ஆட்டுப் புழுக்கை முதலிய எருவையும் குழி மண்ணுடன் கலந்து குழிகளில் போட்டு நிறப்புவார்கள். உயர்ந்த பெரிய பழங்கள் வேண்டுமானால் மரத்திற்கு 40,50 காய்களையே விடவேண்டும். மற்றவைகளைக் கிள்ளி எறியவேண்டும். அல்லாமலும் பிண்ணாக்கு, மலம், சாணி, ஆட்டுப் புழுக்கை முதலிய எருக்களை நீரில் நன்றாய்க் கரைத்து 7, 8 நாள் அழுகவிட்டு அழுகிய நீரை அதிக ஜலத்துடன் கலந்து 2, 3 முறை பிஞ்சு பெருக்கமுதிர்ந்துவரும்போது ஒவ்வொரு செடிக்கும் விடவேண்டும். அது கூலப்பட்டால் செடி ஒன்றுக்குச் சுமார் 2,3 பலம் மட்ட பொட்டிலுப்பை (வெடியுப்பு) நீரில் கரைத்து முன்சொன்ன லிக்கியுட் மென்யூருடன் கலந்துவிடலாம். தோட்டக் காட்சிகளில் நாம் பார்க்

கும் பெரிய பழங்களெல்லாம் இப்படி வளர்க்கப்பட்டவையே.

ஒட்டுப்போடாத நாட்டுக்கொய்பாக்கள் மாதத்திற்கு சுமார் 1000 காய்கள் காய்க்கும். ஆனால் நல்ல ஒட்டு மரங்கள் 100, 150 காய்கள்தான் காய்க்கும். அதிலும் வெள்ளை ஒட்டு கொய்யாவில் சிவப்புக் கொய்யாவைக் காட்டிலும் காய்ப்புக் குறைவு.

உயர்ந்த ஒட்டு வெள்ளைக் கொய்பாவின் இலைகள் சிவந்த ஒட்டுக் கொய்பாவைக்காட்டிலும் நீண்டு பெரிதாயிருக்கும். பசுமையும் குறைவு; அன்றியும் வெள்ளைக் கொய்யாவும், அதன் பூவும் ஒரு காம்பிற்கு ஒன்றுதான் ஆகும், சிவப்பு ஒட்டு கொய்யாவிலும், நாட்டுக் கொய்பாவிலும் ஒரே காம்பில் 2, 3 காய்கள் கொத்தாய்க் காய்க்கும். வெள்ளை ஒட்டுப் பழங்களில் விதையும் குறைவு. மேல் சதை பெருத்து, சதைப்பற்றி இனிய ரசம் நிறைந்திருக்கும். மணமும் அதிகம். இதை இந்துஸ்தானியில தாகிபா அல்லது பால் இனம் என்பார்கள். அநேகமாய் வெள்ளை ஒட்டுப்பழங்கள் சீமை பேரிக்காய்போல் நீண்டு உருண்டிருப்பதால் அதைப் பேரிக் கொய்யா என்பார்கள். சிவப்புக்கொய்பா சீமை இலந்தைப்பழம்போல் அநேகமாய் உருண்டிருப்பதால் அதை 'ஆப்பிள் கொய்யா' என்பார்கள். ஒட்டுக்கொய்யா மரங்கள் 15 வருஷங்களான பிறகு நன்றாய்க் காய்ப்பதில்லை. நட்ட 20 வருஷத்திற்குமேல் மரங்களை வைப்பதில் இலாபமில்லை. சேலத்திற்கடுத்த சேர்வராய மலையின் மேல் கொய்யா அதிகம். பழம் சிறிய கிச்சிலிப்பழம் அளவுகூட இருக்கும். மேலே இரத்தப்புள்ளி கலந்த மஞ்சள் நிறமிருக்கிறது. ஆனால் பழம் சற்றே புளிக்கும். விதையும் அதிகம். சேலம் கொய்பாவும் சேலம் ஆரஞ்சுப் பழத்தைப்போலவே புளிப்புள்ளதாதலால் சிலாக்கியமானதாய்க் கருதப் படுவதில்லை.

கொய்யாப்பழத்தை வேகவைத்து ரசம் எடுத்துச் சர்க்கரையுடன் கலந்து ஒரு உயர்ந்த பழப்பாகு செய்வார்கள். அதற்கு கோவா ஜெல்லி என்று பெயர். இதை ஐரோப்பியர் ரொட்டியில் வெண்ணெயுடன் கலந்து தடவிச் சாப்பிடுவார்கள். இதை அவர்கள் வெகு ருசியுள்ளதாகவும் இனிய மணமுள்ளதாகவும் ஆரோக்கியமுள்ளதாகவும் புகழ்ந்து பேசுகிறார்கள். ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவிற்கும் வெஸ்டிண்டீஸ் முதலிய நாடுகளிலிருந்து கோவாஜெல்லி செய்து ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவிலும் கோவா ஜெல்லி நயமாய்ச் செய்வதற்கு வேண்டிய அனுகூலங்களும் இருக்

கின்றன. ஜோவா ஜெல்லி செய்யும் முறையை இன்னொரு விபாகத்தில் விவரமாய் எழுதப்படும்.

இப்பழங்களைக் கிளி முதலிய பட்சிகள் அணிப்பிள்ளை, வௌவால், எலி முதலியவைகள் கடித்துத் தின்னும். ஆகையால் கொய்யாக்காய் கால்வாசி முதிர்ந்ததும் நுனியிலிருக்கும் பூ இதழ்களைக் கூரிய கத்தியால் அறுத்தெறியவேண்டும். பிறகு ஒவ்வொரு காயையும் சன்ன பல் முதலிய துணியால் செய்த சுருக்குப்போட்ட பெரிய பையில் கொய்யாக்காயை நுழைத்துக்கட்டவேண்டும். இலைகளாலும் பொதிந்து கட்டுவதுண்டு. அப்பொழுது பட்சிகள், அணில் முதலியவைகளால் ஒன்றும் செய்ய முடியாது. ஏழைகள் சுருக்குப்பைகளுக்குப் பதிலாக கந்தல் துணிகளைச் சிறு துண்டுகளாகக் கிழித்துக் கொஞ்சம் கிரெசினையில் அல்லது பினைல் முதலியவற்றைத் தெளித்துக் காயைச்சுற்றிலும் மறைத்து வாழைநார் முதலியதைப்போட்டுத் தளரக் கட்டுவார்கள். கொய்யா வளர்ப்பவர்கள் உயர்ந்த செடிகளாயிருந்தால் இதை அவசியம் செய்யவேண்டும்.

க. தோ. வி.

## CORRESPONDENCE-

### கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ: கிருஷிகன் பத்திராசிரியர் அவர்களுக்கு,

ஐயா,

தங்களுக்கு 29–10-28ல் பாக்குநெல் விஷயமாக எழுதிய கார்டு கிடைத்திருக்குமென நம்புகிறேன்.

(1) பாக்குநெல் எந்த மாதத்தில் விதைக்கக் கூடியது?

(2) அது எத்தனை மாதத்துப் பயிர்?

(3) தங்களிடம் பாக்குநெல் விதையிருக்கிறதா?

(4) விலை என்ன?

(5) அக்டோபர் மாதச்சஞ்சிகையில் அர்கோணம் தாலுகா கீழ்வீதி யென்கிற கிராமத்தில் என் கொல்லை விஷயமாக 'குளத்துவாய் எதிரிலிருக்கும் நிலமா' யென்றும், 'சரிவான நிலமா' யென்றும் தாங்கள் கேட்டது தங்களுடைய அபூர்வமான விவசாய ஞானத்தையும், ஆழ்ந்த அறிவையும் காட்டுகிறது. உண்மையில் ஷை நிலம் குளத்துவாய் எதிரில் தானிருப்பதுடன் மேல் புறமிருந்து கீழ்புறம் சரிவாய்த்தானிருக்கிறது. இவ்வளவு அபார விவசாய ஞானத்தையுடைய தங்களுக்குப் பகவான் நீண்ட ஆயுளைக் கொடுத்து விவசாயிகளுக்கு உதவிபுரியுமாறு செய்ய வேண்டுமென்று ஸ்தோத்திரம் செய்கிறேன். குள எதிர் வாயிலிருப்பதில் என்ன கெடுதலோ தெரி

யவில்லை. குளத்துக்கெதிர்வாயில்தான் பயிரில்லை. சில இடம் பொட்டலாயும் சிலகில் தும்பைச்செடியும் நாய்க்கடுகு முளைத்து இருக்கிறது. பயிராகாத இடத்தில் தண்ணீர் உடனே சுவர்கிறதில்லை, பின் பூமிசேராகிறதில்லை-ஈரம் உலர்ந்த பின் முள்ளுத் துவரைப்போல் கட்டிகட்டியாக இருக்கிறது. மேல்மண் எடுத்து அடிமண் வளம்பார்க்க இது சமயம் மழையும் காலமா யிருக்கிறது.

(6) என் வண்டி மாட்டில் ஒருமாட்டுக்கு சுமார் 5 வருஷக்காலமாக பின் கால் 2ம் கட்டு நடம் அதாவது தொழுவிலிருந்தோ அல்லது கொஞ்ச நேரம் நிறுத்திவைத்திருந்து ஓட்டும் காலத்திலோ சிட்டிகால் என்கிறது. மேலும் 10 அடி தூரம் நடக்கும் வரையில் காலை இழுக்து உதரலாகப் போகிறது. பிறகு வண்டியிலோ, உழவிலோ, கவலையிலோ, எதற்கும் அப்பியந்தரமில்லாமலிருக்கிறது. அந்தச் சிட்டிக்கால் வியாதிக்கு சிகிச்சையுண்டா? கிராமாந்திரங்களில் அதற்கு சிகிச்சை இல்லை யென்கிறார்கள். அது யெனக்கு மனதிற்கு ரொம்பவும் வருத்தமாக யிருக்கிறது.

(7) இப்போது ஷை சிட்டிக்கால் எருதுக்கு 10-12 நாளாக கழுத்து வீங்கி யிருக்கிறது. அதற்கும் என்ன செய்ய வேண்டுமென்று எழுதக் கோருகிறேன்.

K. பார்த்தசாரதி ஐயங்கார்

பதில்

(2) பாங்குநெல் மே. ஜுன் மாதங்களில் விதைத்தால் 4 மாதங்களில் விளைவுக்கு வரும். ஜனவரி மாதத்தில் விதைத்ததில் ஷை பாங்குநெல்லே 7 மாதங்கள் பிடித்திருக்கிறதாகத் தெரிகிறது. ஆகையால் மே, ஜுன் மாதங்களில் விதைப்பது சிலாக்கியம்.

(3) பாங்குநெல் விதை எங்களிடம் கொஞ்சம் இருக்கிறது.

(4) படி 1க்கு அணா 4 ஆகக்கொடுக்கக் கூடும்.

(5) தாங்கள் குறிப்பிடும் நிலத்தில் தக்கைப்பூண்டு விதைத்தால் பயிராகும். அதை, துண்டு துண்டாக வெட்டி அந்நிலத்திலேயே போட்டு மடித்து உழுதால் நிலம் சீர்திருந்தி பயிருண்டாய் விடும். இவ்வாறு இரண்டு மூன்று முறை தக்கைப்பூண்டு மடித்து உழுதால் நிலத்தில்பயிருண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

(6) தாங்கள் குறிப்பிடும் உதறு காலுக்கு சுருக்குவாதம் என்று சொல்லுவதுண்டு. அது பிறவிக்குணம், அதற்கு சிகிச்சையிருப்பதாகத் தெரியவில்லை. சிலர் சூட்டுக்கோல் கொண்டு சூடு போட்டால் மாறிவிடுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மை யெனத் தெரியவில்லை.

(7) கழுத்து வீங்கி யிருப்பதற்கு குறிஞ்சான் இலையை அறைத்துத் தடவலாம். டர்பன்டைன் 1 அவுண்ஸ், தேங்கா யெண்ணெய் 1 அவுண்ஸ் இரண்டையும் குலுக்கி காலை மாலைகளில் தடவலாம். புளியைக்காய்ச்சி

பொறுக்கக்கூடிய சூடாயிருக்கும்போது தடவலாம். தவிடுவறுத்து ஒத்தடம் கொடுக்கலாம். இவைகளெல்லாம் கழுத்தில் கட்டியிருக்கும் இரத்தத்தைக் கரைப்பதற்காகவே செய்யும் முறைகளாகும். ப. ர்.

க்ருஷிகன் பத்திரிகாசிரியர் அவர்களுக்கு,

க்ருஷிகன் ஐப்பசி மாதத்திய சஞ்சிகை 165, 166 வது பக்கங்களிலுள்ள கேள்வி பதில்களைப் பார்த்ததிலிருந்து அவைகளுள் சிலவற்றைப்பற்றி என் அனுபவத்தைத் தெரிவிப்பது உபயோகமாயிருக்குமென்று எழுதலானேன்.

1. புழுதி உழவு. நெல் சாகுபடிக்கு புழுதி உழவு சிலாக்கியமல்ல வென்பது தான் என் அபிப்பிராயம். இருந்தபோதிலும் விவசாய டிபார்ட்டுமெண்டில் அனுபவமுள்ள உத்தியோகஸ்தர்கள் குறுவை சாகுபடிக்கு மட்டில் புழுதி உழவு கெடுதலில்லையென்கிறார்கள். அதையும் நான் பரீட்சை செய்து பார்த்ததில் சிலாக்கியமாய்த் தோன்றவில்லை. ஆனால் என் பரீட்சையில் புழுதியில் ஜலம் விட்டு மறுபடியும் உழப்பட்டது. அப்படி உழாமல் நட்டிருக்க வேண்டுமென்கிறார்கள். கோடை உழவினால், குறுவை சாகுபடிக்கு மட்டில், முந்தி சாகுபடியாய் விடுவதை முன்னிட்டு அனுகூலமுண்டு, சேற்றுழவைக் காட்டிலும் கோடைப்புழுதி உழவில் மாசூல் குறைந்துவிடாது என்று நிச்சயமிருக்குமானால் இதை அனுஷ்டிக்கலாம், நிலத்தின் இயல்பைப் பொருத்தும் இதன் பலன் மாறுதலடைவதாகத் தெரிகிறது. இதன் சாதக பாதகங்களை சாஸ்திர ரீதியாக அனுபவஸ்தர்கள் தெரிவித்தால் பலர்களுக்கு உபயோகமாயிருக்கும்,

2. ஆடுதுறை நம்பர் 2—இது வெள்ளைச் சிறுமணியன். சாதாரண நிலங்களில் 35 நாட்களுக்கு மேலும் கொழுமையுள்ள நிலங்களில் 45 நாட்களுக்கு மேலும் பிடுங்கி நடுவது நலமென என் அபிப்பிராயம். டிபார்டுமெண்டார் விதை விட்டதிலிருந்து இதற்கு 165 நாள் என்கிறார்கள். நான் சென்ற 5, 6 வருஷக்காலமாக சாகுபடி செய்து பார்த்ததில் 6 மாதமும் அதற்கு மேலுந்தானாகிறது. மிஸ்டர் விஸ்வநாத பிள்ளையைப்போல் மார்கழி மாதத்தில் அறுவடைக்கு வரும்படியான நெல் இருக்க வேண்டுமென்று நானும் கோரி இதை ஆனி மாதத்திலேயே விதை விட்டும் பார்த்தேன். அப்போதும் தை மாதத்துக்கு முந்தி அறுவடைக்கு வரவில்லை. நாளது வருஷத்தில் விவசாய டிபார்ட்மெண்டார் வெள்ளைச்சிறுமணியனில் மற்றொரு தினுசென்று 6 மரக்கால் விதை எனக்கு பரீட்சைக்காகக் கொடுத்திருக்கிறார்கள். இது 165 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடுமெனச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் ஆடுதுறை 2ம் நெம்பருக்கும் பார்வையில் வித்தியாசமில்லை. இரண்டையும் ஒரே நாளில் விதைவிட்டு பக்கத்து நிலங்களில் நட்டிருக்கிறேன். முடிவைப் பிறகு தெரிவிக்கிறேன்.

3. பூம்பாளை—இது கோயமுத்தூர் 2 நெ. நெல் விதை விட்டதிலிருந்து 5 மாதத்தில் அறுவடைக்கு வந்து விடுகிறது. நெல் சுத்த வெண்மையு

அரிசியும் அதிகம் காணும். நெல் சிறிதுமல்லாமல் பெரிதுமல்லாமல் நடுத்தர திணுசு, மார்கழி மாதத்தில் அறுக்க வேண்டியதை யுத்தேசித்து இதை சில வருஷங்களாக சாகுபடி செய்து வருவதில் குறிப்பிட்டகாலத்தில் அறுவடைக்கு வந்துவிடுகிறது. ஆனால் இதிலுள்ள கெடுதல் நாத்தங்காலிலிருந்து நாற்றுப் பரிக்கும்போது, வேர் அதிகமிருப்பதால், பாதி நாத்துக்கள் அறுந்துவிடுகிறது. ஒரு மாதத்திற்கு ஒரு வாரம் நாத்தங்காலில் இருக்க வேண்டுமென்ற முறைக்கு இதற்குப் பொருந்தாதென்றும் 28நாட்களுக்குள் பரித்துவிட வேண்டுமென்றும் விவசாய டிபார்ட்மெண்டாரால் சொல்லப்படுகிறது. அப்படிச் செய்தாலும் ஒரு பாகம் நாத்து வீணாய்ப் போகிறது. வெள்ளைச்சிறுமணியன் ஒரு ஏகர் நட 3 மரக்கால் விதையும் 7 செண்டு நாற்றங்காலும் போதுமானால் இதற்கு 12 மரக்கால் விதையும் 12 செண்டு நாற்றங்காலும் வேண்டியிருக்கிறது.

4 பூம்பாளை, பட்டணம் சம்பா, நெல்லூர் சம்பா சிறிய திணுசு இவ்விரண்டிற்கும் ஒரு மாதத்திக்கு ஒரு வாரம் நாத்தங்காலில் நாத்து இருக்க வேண்டுமென்ற விதி பொருத்தமாயில்லை. வேர்கள் அதிக ஆழம் போய் விடுவதால் முந்தியே பரித்து விடவேண்டி யிருக்கிறது. இதற்கு பரிகாரம் என்னவென்று விவசாய இலாகாதாரர்களுக்கும் தெரியவில்லை. ஆகவே இவைகளுக்கு மற்ற சம்பா திணுசுகளைவிட அதிக விதையும் நாற்றங்காலும் வேண்டியிருக்கிறது. அனுபவஸ்தர்கள் இதற்குப் பரிகாரமிருந்து தெரிவித்தால் பலருக்கு உதவியாயிருக்கும்.

வி. பஞ்சாபிகேச ஐயர்.
செங்காலிபுரம்.

பதில்

(1) திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நன்செய் நிலங்கள் முதல்தரமானவை: அநேகமாய் எப்போதும் சிலாக்கியமான மாசூல் கொடுக்கும்நிலங்கள். அந்த ஜில்லாவில் பெரும் பாக நஞ்செய் நிலங்களை கோடைவுழவு உழுது தண்ணீர் வாய்க்காலில் வந்த வுடன், நிலங்களுக்கு தண்ணீர்பாய்ச்சும் அன்றே சேடைஉழவாக உழுது அன்றே நட்டு விடுகிறார்கள், அப்படி தண்ணீர் விட்ட அன்றே நடாமல் குளிர்ந்து விட்டால் பயிர் வெக்கரித்துப் போய் சரியான மாசூல் கொடுக்காது, ஆகையால் கோடை உழவாக உழும் நிலங்களில் தண்ணீர்பாய்ந்த அன்றே நடக்கூடிய சாதனங்களிருப்பின் அவ்வாறு கொஞ்சம் நிலத்தில் செய்து பரீட்சித்து அநுகூலமானால் அதிக நிலத்தில் அவ்வாறு செய்யலாம்.

நாற்றங்காலுக்கு அதிகமானசாம்பல்போட்டு 24 அல்லது 25 தினங்களில் நாற்றுப் பிடுங்கிநட்டாலும், சேடையில் நாற்று ப்பாவினாலும், வேர்கள் அவ்வளவு அதிகம் போகாது. நமது கிருபநேயர் இம்மாதிரி பார்த்து அவர் அனுபோகத்தைத் தெரிவித்தால் நலமாயிருக்கும். ப. ர.

கனம் ஐயா, கிருஷிகன் பத்திராசிரியரவர்களுக்கு,

(1) ஜி. இ. பிசம்பர் 24 கிஞ்சு முதல் பயிராக ஆகஸ்ட்டு செப்டம்பர் மாதங்களிலும், இரண்டாவது பயிராக டிசம்பர் ஜனவரி மாதங்களிலும் பயிர் செய்யலாமென்று சில விவசாய டிமான்ஸ் டிரேட்டர்கள் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஐப்பசி மாதச் சஞ்சிகையிலும் ஜனவரி மாதத்தில் 2வது பயிராக விதைக்கலாமென்றும் எழுதியிருக்கிறீர்கள். 1928ம் ஞு ஜூலையீ கோயம்புத்தூரிலிருந்து பிரசுரமாகும் விவசாயப் பத்திரிகையிலும் ஜனவரி மாதத்தில் இரண்டாவது பயிராகச் செய்யலாமென்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் தைரியமாய் இவ்வருஷம் ஷை கிஞ்சில் 5 ஏக்கர்களில் பயிரிடலாமாவென்று எழுதக் கோருகிறேன். அதுவும் முதல் போகப் பயிர் ஷை கிஞ்சுநெல்லை டிசம்பர் மாதத்தில் அறுவடை செய்த நிலத்தில பயிரிட உத்தேசம். தங்களபிப்பிராயம் தெரிவிக்கக் கோருகிறேன். பழனிவேலு.

## பதில்

கிருஷிகன் புத்தகம் 11பிரதி 7 பக்கம் 166ல் மதுரை ஜில்லாவில் மட்டும் பரீட்சிக்கப்பட்டதில் 4 மாதத்தில் விளைந்ததாகக் கவர்ண்மெண்ட் பிரசுரங்களால் தெரிவதாக எழுதினோம். அத்துடன் ஒரு பிராந்தியத்தில்ஒரு காலத்தில் பயிராகும் நெல்லை வேறு பிராந்தியத்திற்குக் கொண்டு போனால் அறுவடை காலம் வித்யாசப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறோம். ஆகையால் தங்கள் நிலத்தில் அவ்வாறு குறைந்த காலத்தில் பயிராகுமென்றும் சரியான மாசூல் 2ம் போகத்திலும் கொடுக்குமென்றும் எங்களால் திட்டமாய்ச் சொல்வதற்கில்லை. ஆகையால் இவ்வருஷம் 5 ஏக்கர்களிலும் பரீட்சை செய்து பார்க்கும்படி சொல்லுவதற்கு எமக்கு தைரியமில்லை. ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் அதிகஎருவைப்போட்டு இவ்வருஷம் பயிரிட்டுப் பார்த்துஅதில்கிடைக்கும் அனுபோகத்தைக் கொண்டு மேல் வருஷங்களில் அதிகப்படுத்தியோ, குறைத்தோ பயிரிடுவது தான் நலமென்பது எமது அபிப்பிராயம். ப. ர.

ஐயா. கிருஷிகன் பத்திரிகாசிரியவர்களுக்கு

நான் புதிதாக 30 ஏக்கர் புஞ்செய் நிலம் வாங்கியிருக்கிறேன். அதைச் சுற்றிலும் உயிர் வேலிபோடவேணுமென்றுஅபிப்பிராயப்படுகிறேன். என்ன வேலிபோடுவது நலம்? பலனும் கொடுக்க வேண்டும். தங்கள் முதிர்ந்த அனுபவத்தை யொட்டி தெரிவிக்கக் கோருகிறேன். தி. இராமசாமி ரெட்டி.

## பதில்

நிலத்தைச் சுற்றி சுமார் 2 அடி உயரத்தில் கரைபோட்டு அந்த கரையின் மத்தியில் கொடுக்காப் புளி விதை வாங்கி மூன்று சால்களாக ஜூலை ஆகஸ்ட்டு மாதங்களில் விதைத்து குடத்தண்ணீர் ஊற்றிவந்தால் மழைகள் முடிவதற்குள் வேர்கள் நன்றாய் ஆழமாய் ஓடிவிடும். அடுத்த மழைகள் வரை வாரம் ஒரு தண்ணீர் ஊற்றி வந்தால அப்பால் தண்ணீர் வேண்டியதில்லை. செடிகள் உயரும் வரை ஆடுமாடுகள் கடிக்காதபடி வேலி அமைப்பது அவசியம். ப. ர.

# CATTLE SECTION—கால்நடைப் பகுதி

## Some Common ailments in Cattle.

## மாடுகளுக்கு உண்டாகும் சில சாதாரண நோய்கள்.

கிருஷிகன் வாலம் XI நம்பர் 7 பக்கம் 162ன் தொடர்ச்சி

3. வயிற்றுப் பொருமல்.—இந்த வியாதியில் வயிறு கெட்ட காற்றால் விம்மிவிடுகிறது. இந்த வியாதி கால்நடைகளுக்குச் சாதாரணமாய் வருவதுண்டு. மேற்சொல்லிய கெட்ட காற்று செரியாத உணவிலிருந்து உண்டாகிறது.

காரணங்கள்:—நனைந்த புல்லையாவது பச்சைப் புல்லையாவது அதிகமாக மேய்தல், வழக்கமில்லாத தீனியைத் தின்னல், கோடை காலத்தில் சரியாய்த் தீனி கிடைபாதிருந்து முதல் மழை பெய்த உடன் முளைத்த கொழுகொழுத்த இளம்புல்லை மிதமிஞ்சி மேய்வதாலும் இந்த வியாதி உண்டாகிறது.

கால்நடைகளின் வயிற்றிலேயே இந்தக் கெட்டகாற்று உண்டாகிறது. வயிற்றில் காற்று அதிகமாய்விட்டால் பொறுக்க முடியாத அபாயமான குறிகள் தோன்றுகின்றன.

குறிகள்:—முதல் முதல் இடது பக்கத்தில் வயிற்றிலுள்ள பள்ளம் காற்றால் ஊதி இருப்பதைப் பார்க்கலாம். அதைக் கொட்டினால் மத்தளம் போடும். வலி பொறுக்கமுடியாமல் படுத்தும் எழுந்து கொண்டுமிருக்கும். கொச்சிதமாக இருக்கும்போது விடாது அசை போடுகிற மாடு இந்த வியாதிகண்டதும் வாயை அசைக்கிறதில்லை வியாதியின் ஆரம்பத்திலேயே தக்க சிகிச்சை செய்யாது போனால் ஒவ்வொரு விநாடியும் காற்று அதிகரித்து வயிறு மிகுதியாய்ப் புடைத்து மாடு மூச்சு முட்டிக் கீழே விழுந்து இறக்கிறது.

பரிகாரம்.—கர்ப்பூரத்தைலம் (Turpentine)—2 அவுன்சு (அதாவது அரை மாகாணிபடி) விளக்கெண்ணெய் 20 அவுன்சு இரண்டரை ஆழாக்கு அரை ரூபா இடை பெருங்காயத்தையும் நன்றாய்ப் பொடித்து எண்ணெயில் போட்டுக் கொடுக்கவும்.

இது தக்க பிரயோஜனத்தைக்கொடுக்கும். இதில் கொடுத்திருக்கும் அளவு நடுத்தரத்து மாடுகளுக்கு. சிறுதரத்து மாடுகளுக்கும் கன்றுகளுக்கும் உடம்பறிந்து மருந்தைக் குறைக்கவேண்டும். ஒரு சமயம் இந்த மருந்தில் மாடு அரை மணிநேரத்தில் அதாவது ஒன்றேகால் நாழிகைக்குள் சௌக்கியப்படாவிட்டால் திரும்ப ஒரு அவுன்சு அதாவது கால் மாகாணிபடி கர்ப்பூரத் தைலமும் 10 அவு

ஞ்சு அதாவது ஒன்றேகால் ஆழாக்கு விளக்கெண்ணெயுமாவது அல்லது சுக்குத்தூள் 2 அல்லது இரண்டரை தோலா அதாவது 2 அல்லது இரண்டரை ரூபா இடை; நாட்டுச் சாராயம் 4 அல்லது 5 அவுன்சும், (மாதாணிபடி) 20 அவுன்சு அதாவது இரண்டரை ஆழாக்கு தண்ணீர் கலந்து கொடுக்கலாம். வியாதியின் குறிகள் மாறினபின் சில தினங்களுக்கு மாடுகளுக்கு வழக்கமான தீனி யைக் கொடுக்கக்கூடாது. 12 முதல் 24 மணி நேரத்திற்குப்பின் (30 முதல் 60 நாழிகைக்குப்பின்) இலேசாகச் செரிக்கும் ஆகாரம் அதாவது அரிசிக் கஞ்சி கொடுப்பது உசிதம். பின் இரண்டு அல்லது மூன்று நாளைக்கு இரண்டு தோலா அதாவது இரண்டு ரூபா இடை சுக்குத்தூளும் நாலு தோலா அதாவது நாலு ரூபா இடை சோடா உப்பும் தீனியில் கலந்து கொடுக்கலாம்; அல்லது தண்ணீரில் கலக்கிக் கொடுக்கலாம், அல்லது தண்ணீரில் கலக்கிப் போட்டுவிடலாம். அல்லது நாலைந்து நாளைக்குச் சுக்குத்தூள் 2 தோலா அதாவது 2 ரூபாயிடை, நிலவேம்புதூள் 2 தோலா; அதாவது 2 ரூபா இடை; எட்டி விதைத்தூள் முக்கால் அல்லது 1 தோலா அதாவது முக்கால் அல்லது 1 ரூபா இடை, இவைகளைக் கலந்து கொடுக்கலாம். மேல்சொல்லிய சிகிச்சைகளில் சரிப்படாத பயங்கரமான குறிகள் காட்டிக்கொண்டிருந்து கால்நடை வைத்தியர் கிடைக்காத சமயத்தில் அதிகமாகப் புடைத்திருக்கிற இடதுபக்கத்தில் கடைசி நெஞ்செலும்பிற்கும் முதுகெலும்பிற்கும், பின்னங்கால் சப்பை மேட்டிற்கும் மத்தியில் ஒரு சுத்தமான கத்தியைக்கொண்டு ஆழமாகக் குத்தி காற்றைப்போக்கலாம். கத்தி சுத்தமாக இருந்தால் புண் அனேகமாய் ஆறிவிடும்.

4. ஈன்ற கால்நடைகளுக்குக் கொடிவிழாதிருத்தல்:—சில சமயங்களில் பசுக்கள் கன்றுபோட்டு 24 மணி அல்லது 60 நாழிகை அல்லது அதற்கு மேற்பட்ட காலம்வரை கொடி வயிற்றில் தங்கி துற்குறிகள் காட்டாதிருந்தபோதிலும் 24 மணி நேரத்திற்கு அதாவது 60 நாழிகைக்குமேல் கொடி விழாது போனால் அதைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியது அவசியம்.

காரணங்கள்:—காலத்திற்கு முந்தி பிரசவிக்கும் போதும் அதிக நேரம் வாதைப்பட்டுபிரசவிக்கும்போதும் கொடி இலேசாய் விழுகிறதில்லை. இது கிழட்டுப் பசுக்களில் சகஜம். வயது முதிர முதிர தேகத்தில் பலங்குறைந்து கொடியை வெளிப்படுத்த சக்தி இல்லாது போய்விடுகிறது.

நம் நாட்டில்கொடி விழாத சமயங்களில் 24 மணி அதாவது 60 நாழிகை நேரம்வரை கவனியாது பொறுத்திருக்கலாம்; அதற்கு மேலும் விழாதிருப்பதைக் கவனிக்காவிட்டால் மிகுந்த அசம்பாவிதங்கள் நேரிடும்.

குறிகள்.— கொடியின் ஒரு பாகம் இடையிலிருந்து தொங்கிக்கொண்டிருக்கும். மாடு அடிக்கடி பாதத்தைப் பூமியில் மோதிக்கொண்டும், வாலை சுழற்றிக் கொண்டுமிருக்கும். கொடியை வெளியேதள்ள அடிக்கடி முக்கிப் பார்த்தும் கொடி விழுகிறதில்லை.

பரிகாரம்.—மாடு ஏய்ப்பாயும் களைப்பாயுமிருந்தால் நாட்டு சாராயம் 10 அவுன்சு அதாவது ஒன்றேகால் ஆழாக்கு சமம் தண்ணீர் சேர்த்துக் கொடுக்கவும்.

ஒருபடி கம்புமாவைப் புட்டவியலாய் அவித்து அத்தோடு 2 பவுன் அதாவது 14 பலம் பனைவெல்லஞ்சேர்த்துக் கொடுக்கவும். அல்லது Okra Capsules (வெண்டைக்காய்) 15அல்லது 20 தோலா அதாவது 15 அல்லது 20 ரூபா இடையும், 10 தோலா அதாவது 10 ரூபா இடை எள்ளும் 10 தோலா அதாவது 10 ரூபா இடைபனை வெல்லமும் நன்றாய் இடித்து 1படி கஞ்சியில் கலக்கிக் கொடுக்கலாம். இது தக்க பிரயோஜனத்தைக் கொடுக்கும். தவறினால் இலேசாய் இழுத்து வெளிப்படுத்துமேற்பாடுகள் செய்யவேண்டும். இது தொழில் தெரிந்தவர்கள் செய்வது உசிதம். அவர்கள் கிடையாது போனால் கீழே விவரித்திருக்கிறபடி செய்யவேண்டும். ஒரு அடி நீளமுள்ள இரண்டு தட்டையான குச்சிகள் எடுத்து வெளியே தொங்குகிற கொடியின் நுனியை இரண்டு குச்சிகளுக்குமிடையில் வைத்து குச்சிகள் ஒன்றின்மேல் ஒன்றாயிருக்க இரண்டு பக்கத்து நுனிகளையும் இரண்டு கைகளால் இறுக்கிப் பிடித்து மேல் நோக்கி கொடியைக் குச்சிகளின்மேல் சுற்றவேண்டும். இப்படி இழுப்பதில் கொடி வாராதிருந்தால் அப்படியே விட்டுவிட்டு மறுநாள் முயலவேண்டும். எந்தக் காரணத்தாலுங் கொடியைப் பலமாக இழுக்கக்கூடாது. கொடி விழுந்தபின் கஞ்சி முதலியனகொடுத்து மாட்டின் தைரியத்தை பலப்படுத்துவதைத் தவிர வேறு விசேஷமாய்ச் செய்வதொன்றுமில்லை. 3 நாளைக்குப்பின் எப்போதுங் கொடுக்கிற தீனி கொடுக்கலாம்.

எப். வேர்

சூப்ரண்டெண்டெண்டு,சிவில் வெட்டரினெரி டிபார்ட்மெண்டு மதராஸ்.

# RAISING WATER BY MHOTE BY 2 MEN WITHOUT CATTLE

## மாடின்றி 2 நபர் கைகளால் சுற்றி இரவையாகும் கமலைசால் 2 அமைந்தமுறை

### வாலில்லாத கமலைசாலால் பெருலாபம்

கிருஷிகன் 9 ம் வாலம் 317-ம் பக்கம் 2 சால் கமலை கையால் சுற்று மேற்பாடொன்றறிவித்தோம், அதைப பார்த்த கிருஷிகநே யர்கள், திருநெல்வேலி பாலம் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் வண்ணார் பேட்டை, இரும்புவேலை ஷாப்பு புரொப்ரைட்டர் மிஸ்டர் எ. ஜீ, கண பதி ஐயரவர்களிடம் காட்டியதில் கவனித்து செய்து தருவதாகக் கூறி ஆலோசனை செய்து வந்தார். நாமறிவித்த கமலை பாடசாலை தோட்டம் வீட்டுப்பக்க தோட்டங்களுக்கு சொற்ப விஸ்தீரணம் பாசனம் செய்ய உதவும்.

நாம் அறிவித்த முறையை மாறுதல் செய்து, வேறு விதமாக மிஸ்டர் எ. ஜி. கணபதி ஐயரவர்கள், புது மாதிரி கமலையமைத்திருக்கி றார். இந்த நவீன சுற்று கமலையோ 2 மாடுகளாலிறைக்கும் கமலை யால் எவ்வளவு நிலம் பயிரிடலாமோ, அவைகளுக்கு பொருத்தமான தென்று கூறலாம்.

புதிய சுற்று கமலை 2 நபர் கைகளால் மாரி மாரி சுற்றவும் 1 சா லிறைத்துக் கொண்டும் 1 சால் ஜலம் கவிழ்த்த வண்ணமாயிருக்கும். இந்த கமலைக்கி வாலு நீள வால்கயர் வால் செலவு செய்ய வேண்டிய தில்லை, நீடித்த நாளைக் குழைக்கும்.

எவ்வளவு தீனி செலவு செய்து போஷிக்கினும் கமலைமாடு மெலி ந்து வருட ஆகரில் வாங்கின விலைக்கிரணகியே விலையாகும். வண்டி மாடு போஷிக்கின், வாங்கின விலைக்கி ஏற்றமாக விலையாகும். கமலை மாடு நஷ்டந் தீர்த்து விவசாயிகளுக்கு உதவிசெய்த மிஸ்டர் ஏ. ஜி. கண பதி ஐயரவர்களுக்கு தமிழ் ஜில்லா ஜனங்கள் நன்றிகூறி வந்தனம்புரிய என்றுமுங் கடமைபூண்டுள்ளார்கள்.

கமலையமைப்பு படத்தில் விபரமறிவிக்கினும் உபயோக முறை யும் கமலை நுட்பமும் அறியாமலும் நேரில் பார்க்காமலும் போனால் பொருள் விளங்காதெனக் கருதி சில கூறி மேற் செல்வாம்.

வடக்கயறு சங்கிலிகள் வால்வு தகடு உச்சியவலையத்தில் கோர்வை செய்யவும் கமலைசால் நிலைத்து நிடும், வடக்கயறு சங்கிலிகள் வடம்போ டும் சக்கரத்தில் படிந்தும் சக்கரத்தில் சுற்றும்போது 1 கமலை சால்

ஜலங்கவிழ்க்கும்; பிறிதோர் சக்கரத்தில் சுற்றிய வடக்கயறு நெகிழும் போது மற்றோர் கமலை சால் ஜலம் சோருவது மாயிருக்கும். பிடியை சுற்றும் 2 நபரும் 1 தபா வலப்புறமாகவும் 1 தபா இடப்புறமாகவும் மாறி மாறி சுற்றவே கமலை யிறவை நடந்த வண்ணமாகவு மிருக்கும். 2 மாடு போஷித்து இறவையாவது லாபமன்றோ? மணிலாவாழை நாரில் வடக்கயறு போட்டிருப்பது 2 வருடத்துக்கு மேலுழைக்கும். வாழை நார் உறுதிஜாஸ்தி. வாலுள்ள சாதாரண கமலைக்கு வால்வகைறுவின்றி இறவை செய்ய வியலா. ஏதேனும் சாமான் குறையினும், ரிப்பேர்வரினும், அந்த சாமான் தயாரிக்கும் வரை இறவை செய்ய முடியாது. பிரஸ்தாப சுற்று கமலையிலோ வால் சம்பந்தமான சாமானின்றி வால்வு தகடு இறவை செய்ய உதவுகிறது. வாலில்லாத சுற்று கமலை லாபமன்றோ? சாலில் ஜலங் கோரவும் கோரிய ஜலம் ஒழுக விடாது காக்கும் (வால்வு தகடு) அமைப்பு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கிறது.

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங்கில்லை உயிர்க்கு.

என்ற நாயனார் வாக்குப்படி ஒருவரறிந்த விஷயங்களை பிறர்க்கறிவிக்கப் படாதென்று கூறுமாறு சாலில் சோரிய ஜலம் ஒழுக விடாமல் (வால்வு) தகடு காத்து நமக்கறிவூட்டுகிறது.

சாதாரண கமலையில் வாலுருளை வடம் போடும் சக்கரம் (வட்டெண்பர்) அமைப்பு வித்தியாசத்தால் கமலை சால் அசைந்து வந்து வாலுருளையில் தாக்கி மோதி சால் தகருதல் பொழிந்துவிடல், ஒட்டைவிழல் முதலிய கெடுதி யடைகிறது. கமலைசால் தகர்ந்து கெடாத முறையில் பிரஸ்தாப சுற்று கமலைசாலேற்படுத்தி யிருக்கிறது:

சாதாரண கமலைக்கால் சட்டத்துக்கு கீழாக கமலை சால் ஜலங் கொட்டுவதியல்பு. பிரஸ்தாப சுற்று கமலை சால் ஜலங் கவிழ்க்குமுறை வேறாகவமைந் திருக்கிறது. சாலானது கமலைக்கால் வளைவு தாங்கிக்கு மேலாகவும், வடம் போடும் சக்கரத்தில் பாட்டு வசமாயுஞ் சால்படிந்து ஜலங்கவிழ்க்குந் தோற்றமானது தன்னை வணங்கிய பக்த கோஷ்டிகளை ஜெகதீஸ்வரர் ரக்ஷிப்போ மென்று அபயஸ்தங் காட்டும் பாவனையாய் கமலையை நம்பியவிவசாயிகள் காப்பாற்றப்படுவாரென்று உறுதிமொழி கொடுப்பது போலுமாம்.

வளைவு தாங்கி சக்கரத்தின்மேல் கவிழ்க்கும் ஜலம் கிணற்றில் சிதறிப்போகாதிருக்குமாறு இரும்புத் தகடு காக்கிறது.

கமலேசால் ஒன்றேகால் அடி உயரமும் ஒன்றேகால் அடி குறுக்களவு அகலமும் விருத்தவடிவமுள்ளது- கமலே சால் ஒவ்வொன்று 10 *காலன் ஜலம் பிடிக்கும். 15 அடி ஆழ தணிவு கிணற்றில் 1 நிமிஷத்துக்கு 6 சாலிறைக்கிறது. 2சாலும் ஒரேதடவை இரவையாகும். ஜலம் சாதாரண கமலேசாலுக்கு 1-ஒன்றேகால் சால் பிடிக்கும் அளவு ஜலம் இறவை யாவதாகச் சொல்லலாம். 1 மணிக்கு 3600 காலன் ஜலமிறைக்கும். கிணர் ஆழம் ஜாஸ்தியாகுங்கோறும் இறைக்கும் ஜலமளவு குறைந்து கொண்டே வரும்- கமலே விலை 60 ரூபாயாக விலையாகிறது. கமலே வாங்கிய விவசாயிகள் இரவை சுலபமென்கிறார்கள். கமலே பிரியமாய் விலைப் போகிறது சால் தானியம் அளக்கிற மரக்கால் போன்றது.

சீனாவில் வாசில்லாத கமலேசால் ஆதிமுதலிருந்து வந்தது- அதை சுமார் 40 வருடங்களுக்கு முன் நடந்த சென்னை பொருட் காட்சிக்கு திருவிக்கப்பட்டது. அந்த கமலே யமைப்பு முறை தொந்தரவும் சிக்கலுமுள்ளது. அதை இஞ்சினீர் மிஸ்டர் ஸ்டோனி துரை சீர்திருத்தி உதவினார். திருத்திய கமலேயங்கங்கே யரிதாய் வழங்கிவந்தன.

அந்த வாசில்லாத கமலேசாலுக்கு தூக்கு நிலைகம்பி கிணற்றிலிரக்கி சால் கோர்க்கும் முறையிருந்தது. அவ்வித முறையைமாற்றி கையால் சுற்று கமலே நவீனமாய் நிர்மாணித்த மிஸ்டர் ஏ. ஜி. கணபதி ஐயரவர்களுடைய சாஸ்திர புத்திநுட்பவாராய்ச்சியை கவனிக்குந்தோறும் அத்யந்தமகிழ்ச்சி ததும்பிக்கொண்டிருக்கிறது. கமலேவடக்கயறு சுற்றும் சக்கரமமைத்த ஏற்பாடுஞ் சிலாக்கியத் திற்குரியது. பிரஸ்தாப கமலே அளவிறந்த லாபந்தரம். அடிக்கடி ரிப்பேர் ஏற்படமாட்டாது. சக்கர இருசுக் கடைய- மற்றப் பித்தளை உள்வாய் 1-2வருடத்தில் தேய்ந்து போம்- ஜாஸ்திடாக பிரிதோர் ஜோடி 4உள்வாய் வாங்கவேண்டும்- அந்த உள்வாய் வேண்டியபோது உபயோகிக்க உதவும். வடக்கயறு மணிலாவாழை நார்வடம் மிச்சசோதியிருப்பது நலம் [நிற்க]

சாதாரணமான வாலுள்ள கமலே சாலால் ஏற்படும் நஷ்டம் சாமானியமன்று- அந்த நஷ்டமும் முந்திய வாசில்லாத கமலேசாலு

*1 கமலேசால் கொள்ளும ஜலம் மணெண்ணெய் வரும் டின்னுக்கு 2½ டின்னவ்வளவு ஜலம் பிடிக்கும்.

1 கன அடி ஆறேகாலேமாகாணி காலன் ஜலமாகும்-

நீளம் 1 அடி, அகலம் 1 அடி ஒன்றையொன்று பெருக்க சதுர அடியாம். சதுர அடியை உயரத்தில் பெருக்க கனஅடியாகும்.

1 கன அடி ஜலம் 10 பவுண்டிடை நிறையாகும்.

பயோகிக்கும் முறையறியாமல் அரிதாய் வழங்குகிறது. அதை உபயோகிக்கும் முறையும் வாலில்லாக் கமலை பெரும் லாபமும் பேசி, மேல் சுற்று கமலை முறையை தொகுத்துப்பேசுவாம்.

ஆயில் இஞ்சினால் நெல் குத்தல், கிணற்றிறவையாதல், தேசத்தில் பரவி வருகிறது- இஞ்சினமைப்பு நுட்பம் அறிந்து இஞ்சினுபயோகிப்போர் ஏகதேசமே- அன்னோர் நிதானமாய் செலவு செய்து நஷ்டமின்றி இஞ்சினுபயோகிப்பவர். இஞ்சினமைப்பு ரிப்பேர்முறை யறியாதாமுவோர் ஜாஸ்தி- அன்னோர் டிரைவர் சொற்படி ஜாஸ்தி செலவு செய்து நஷ்டமடைகின்றனர், டிரைவர் செய்யுஞ் சூது வஞ்சகம் சகிக்க முடியாதெனத் தஞ்சை வர்த்தக மித்திரன் கூறுவதாக 1922-ம் வருடம் பிரசுரமான திருச்சி இந்திய விவசாயப் பத்திரிகை விவரமாய் கூறி வழங்குகின்றன. ஆயில் இஞ்சினுபயோகத் தாழ்வு போன்று வாலுள்ள கமலை சாலும் வாலில்லாத கமலை சாலும், ஆழந் தெரியாமல் நேரே இறைவையாவதில்லை- ஆங்கில கப்பேனி இஞ்சின் சரியாய் காப்பதால் நஷ்டமாவதில்லை. இந்திய சாமான் தகுதியாய் அமையாதவரை நஷ்டமடையவே செய்யும்- எந்த சாமானும் வாங்குவது பெரிதன்று- அந்த சாமானை ஜாக்கிறதையாய் ஆண்டு உபயோகிக்குந் தந்திரோபாயத்தால் நீடித்த நாளுழைக்கு மென்பதை நேயர்கள் திஸ்டியாய் கவனிப்பது அவசியம்-வாலுள்ள கமலைசால் குறைவு நிவர்த்தி பேசி பின் வாலில்லாத கமலையைப்பற்றி விவரிப்போம்-

வாலுள்ள கமலைசால் ஜலந் தங்கும், தங்கிய ஜலங்கவிழ்க்கும்படி மாட்டை முன் செலுத்துவதால் கமலை காலில் சால் மோதிபொழிந்து ரிப்பேர் ஏற்படும்- வால்ஜலம் வடியாதபோது கமலை வடக்கயறை லேசாயிழுத்துவிடில் ஜலம்வடிந்துவிடும்- சால் கெட மாட்டாது. மேலும் கமலைசால் வாலுருளையில் தாக்க உருளை சால் மேல் விழுந்து சாலை தகர்க்கும்- நிவிர்த்தி பார்க்கக் கவனியாமல் நஷ்டப்படுவது பரிதாபம்- கமலை சாலில் வடங் கோர்க்கும் வளையத்திலிருந்து கமலைசால் பின்புறம் உடல் விளப்பக்கம் வரை 12 இஞ்சு நீளமிருக்கும்- அத்துடன் சால் விலகி வாங்கி வருவதற்காக 6 இஞ்சு கூட்ட 18 இஞ்சு நீளமாகும்- வாலுருளை மையமிருந்து 18 இஞ்சு நீளமுள்ள 1 கயிறு கிணற்றைப் பார்க்க விடவும்- அந்தக்கயிறு முளைக்குசரியாய் வரும்படியான நிலைமையில் வடம் போடும் சக்கரத்தில் போடும் வடம் முனை வரவேண்டும்- அதற்குக் கட்டியானால் சால் வாலுருளையில் தாக்கவே செய்யும்- இதற் கொத்தமையாக கமலை காலும் கால் சட்டத்திலமை

த்த வடம் போடுஞ்சக்கரக்காலும் அமைக்க வேண்டியதத்தியாவசியம். வட்ட சால்வட்டங்கோர்க்கும் வளையத்துக்கு பின்புறம் அழுவு கம்பி சாஸ்தியாக சாலிருப்பதுக்கு தக்கதாக கணக்கிட்டு கமலை கால் நடவேண்டும் வாலுருளை கமலை மிதிகல்லில் சமமா யமைக்காதவரை உருளை தள்ளிசால்கெடும். வட்டசால் 4 இஞ்சு அகலமுள்ள பல தகடு சேர்த்தமைகிறது. தகடும் ஆணியும் ஜாஸ்தியால் கனமுங் கூடிவிடும். சாலில் கோரும் ஜலப்பாவுய போதாமெதென்று சால் கனமுஞ் சேருவ தணுவசியம். சால் கனக்கூடும் நிரைபடி தூலமழவு கூடும்படி சாலமைப்பதலாமன்றோ?

இராமனுதபுரம ஜில்லா ருசபாலையமும் அதன் பக்கிருமங்களி லும் மூக்கு சால் வழங்குகிறது மூக்கு சால் 2 தட்டாலமைகிறது. கனங் கூடுவதில்லை- சால் மூக்குவாலுருளையில் தாக்காதவாறு கமலை கால் நடப்படுது- வால் சாலமைச்சினும் மூக்கு சால் எக்கும் வழங்கா தது பரிதாபம்.

வாலுள்ள கமலைசால் சம்பந்தமான வால் செலவு வாலுருளை வால் கயறு சால் கிணற்றிலும் மலையிலும் மோதி தாக்குவதில் வருட வாரி வீதம் ரிப்பேர் முதலிய செலவு கவனிப்பாமானுல் வருடந் தவராமல் 12ரூபாய் முதல் 18 ரூபாய்வரையாகும் வாலுள்ள கமலை சால் வருட வாரி வீத செலவு வகையில் 1 வருட செலவு துகைக்கி வாலில்லாதகமலை சிருசைஸ் சால் 2வாங்கலாம். அது வருடம் 1க்கு சருசரி ஒன்றரை ஒணதேமுகால் ரூபாய்க்கதிகப்படாது. மிந்திய வருடம் வால வகைருசெலவு மிஞ்சும்- வாலில்லாத கமலைசால் 10 வருடம் உழைக்கும்- 1 வருட வால் செலவால் 2 சால்வாங்கியாழு வது நிரந்தர லாபமன்றோ?

வாலுள்ள கமலை சால் தானே ஜலங் கோருது. சால்ஜலங் கவிழ்த் தவுடன் வால்கயறை பிடித்துகமலை மிதிகல்வரைவந்து வால் கயிறைத் தூக்கிப் பிடித்து ஜலங்கோரவேண்டும்- வடக்கயறைமிதியாமல்தீருது- வடக்கயறு மிதிக்கும்போது, மனிதனுக் கபாயம் நேரிடுவதுமுண்டு. வாலில்லாத கமலைசால் தூரிலுள்ளவால்வு தகடால் தானேஜலங் கோருவதால் மனிதன் பிரயத்தினம் அனுவசியம். மனிதன் அபாயத் தை கருதியேனும் வாலில்லாத கமலைசாலை விரும்புதவசியம்.

சென்னை மாகாண மொத்தம் கிணர்களில் இரவையாகும் கமலை களுக்கு வால் செலவு சாமானியமா? வருடமொத்தம் வால் செலவா குந் துகையை வசூல் செய்யின் கல்வியிலாகா யூனிவர்சிட்டி 2-1

நிர்வாகஞ் செய்ய கஷ்டமாய் விடாது. வால்செலவு அனுவசியமாய் செலவாவது நீங்கும்படி வாலில்லாத கமலை சாலுபயோகிக்கும் ஏற்பாடு பரவும்படி அரசுரிமை பிரசங்கத்துடன் சேர்த்து பிரசாரம் செய்யும்படி தேசாபிமானிகளை வேண்டுகிறோம்.

ஒவ்வோர் டிஸ்டிரிக்கட்டிலும் 50 ஆயிரமுதல் 1 லட்சங் கிணறிருக்கலாம். கிணர் தோறும் 1 முதல் 5 கமலை யிரைவையாகலாம். சருசரி கிணர் 1க்கு 2 கமலை யிரைவையாவதாகக் கருதலாம். இவ்வாறு பிரசிடென்சியிலுள்ள கிணர் பூராவுக்கும் வீதாசாரப்படி வருடந் தவறாமல் 15 லட்சமுதல் 30 லட்சம் ரூபாய்வரை வால் செலவாகும். இவ்வளவு அபார செலவுசெய்து ஜனங்களறியாமல் கஷ்டமாவதை விவசாய விலாகா கவனியாதது மகா தௌர்பாக்யமே. வாலுள்ள கமலை சால் உபயோகம் லாபம் விவரித்து போதிக்கும்படி விவசாய விலாகாவை வேண்டுகிறோம்.

(நிற்க வாலில்லாத கமலைசால்பயனைப்பற்றி சிந்திக்கக்கடவோம்.)

வாலில்லாத கமலைசால் தொழிலறிந்த சாஸ்திரிகள் சகாயத்துடன் கமலையிலமைக்க வேண்டும். வாலில்லாத கமலைசால் வாங்கியோர் சாலமைக்கு முறையறியாமலும் சாலிரைவையாகாமல்சிக்கிரிப்பேர் நுட்பமறியாமலும் கஷ்டமடைகின்றனர். வாலில்லாத சால் அநேகரிடம் கேட்பாரற்றுப் பாழாய்க் கிடக்கிறது. பொருளருமை யறியாதோர் செய்கை தானென்னே? வருந்துதற்குரியது.

வாலில்லாத கமலைசால் விற்போர் உபயோகமுறை குறிப்பு கொடாமல் அபிவிர்த்தியாகவில்லை, ஆனால் இஞ்சின் உபயோக முறை குறிப்பு கொடுப்பதால் இஞ்சின் அபிவிர்த்தி தேசத்தில் பரவுது. சுதேசசாமான் விற்போர் சாமான் விற்கு முறை கவனியாதது விசனத்திற்குரியது.

ஆங்கில வர்த்தகசாமானே பிரியமாய் விலையாகிறது, அவ்வாறு இந்திய சாமான் விற்பதில்லை. ஒவ்வொருவரும் வாத்தகாபிவிர்த்தி பிரசித்தஞ் செய்யும் நோட்டிசு பரவச்செய்யுஞ் சாதுரியதந்திரோபாயத்திலிருக்கிறது. வர்த்தகாபிவிர்த்தி தந்திரோபாயஞ் சருதாமல் சாமான் விலையாகவில்லையென்று கவலைப் பட்டாவதென்ன?

வாலில்லாத கமலைசால் பாழாய் கிடப்பதேன்? உபயோகிக்கப்படாதா? வாலுள்ள கமலைசாலாலடையுங் கஷ்டம் நஷ்டம் தெரியவில்லையா? வென வினவும்போது பின்வரும் ஆட்சேபனை கூறுகிறார்கள்.

(1) தூக்கு நிலைகம்பியில் கோர்த்த கமலை சால்வளையம் ஓடாமல் சிக்கலாய் கமலை யிரைக்கக் கூடவில்லை-

(2) கமலைசாலிரைக்கும்போது தூக்கு நிலைகம்பி வளைந்து இரவைக் கிடை யூறாய்விடுத-

(3)மணலில் கட்டிய கிணர்களில் கமலைசால் தகர்ந்து ஓட்டை யாவதில்லை; பார் கிறைகளே மிகுதியாயிருப்பதால், சால் கிணற்றில்தாக்கி சேதமாய் விடுகறது-

இது போன்ற முகாந்திரங் கூறி, வாலில்லாத கமலைசால் உபயோகமில்லை என்று கூறுவர். இங்கே பிரஸ்தாபித்த தர்க்க வினை தவிர வேறு காரணம் கிருஷிகனில் தெருவிக்கினும் வேண்டுஞ் சமாதானங் கூற தடையிரு. மேற்கூரிய தர்க்க வினை 3 க்கும் விடைகூறி மேற் செல்வாம்

வாலில்லாத கமலைசால் வாங்குவோர், சாலை வழக்கத்திலுள்ள கமலையிலமைக்கிறார்கள்- சாதாரண கமலை கால்வளைவு ஜாஸ்தி- ஜாஸ்தியாய் வளைந்த கமலை கால் வாலில்லாத கமலை சாலுக்கு பொருந்தவே செய்யாது- குரைவான வளைவு காலேவாலில்லாத கமலைசாலுக்கத் யாவசியமானது. வாலில்லாத கமலைசால் தூக்கு வளையம் வானம் பார்க்கும்படி நேருக விருத்தவேண்டும் அந்த வளையத்திலிருந்து கமலைசால் பின்புறம் வாய் வளையம்வரை பெரிய சாலில் 6 இஞ்சிருக்கும்- வளையம் தூக்கு நிலைகம்பி புழங்கியோட $\frac{1}{8}$ இஞ்ச ஆக $6\frac{1}{8}$ இஞ்சாகும். இந்த அழவை 1 கம்பில் குடுத்து தூக்கு நிலைகம்பி முன்புறம் வைத்து கிணற்றை பார்க்க நீட்டவும். இதற்கொத்துவ நம்படியான நிலைமையில் வடம்போடுஞ் சக்கரத்தில் போடும் வடம் முனை வரவேண்டும்- இவ்வித அழவுக் கொவ்வும்படி கமலைகால் கடவேண்டும். சிருசைஸ்வாலில்லாத கமலைசாலுக்கு கமலை கால்வளைவு குறைவாயிருக்கவேண்டும். வடமுனை தூக்கு நிலைகம்பியிலிருந்து $6\frac{1}{8}$ இஞ்சுக்குகுரையினும் சாலிரைவையாக மாட்டாது- இந்த சூட்சமம் அரியாமல் வாலில்லாத கமலைசால் உபயோக மில்லையென்று கூறும் அறியாமைக் கென்ன விடையளிக்கினும்யாது பயன்?

2—3 வினைக்களுக்கு ஒன்ருகவே பாவித்து விடை கூறுவது போதியதாயும் பொருத்தமானதாயு மிருக்கும்-

மணல் கிணறில்வாலில்லாத கமலை சால்கெடா-பார் கிணற்களிலிறைக்கும் வாலில்லாத கமலைசால் தகர்ந்து கெடுமென்று கூறுவது பெருநகைப்பை விளைக்கிறது, தென்னையில் தேள் கொட்ட பனையில்

னெறி கட்டிற்றென்ற கதை போன்றிருக்கிறது. காரணம் வேறென்று பின் போகப் போகத் தெரியவரும்.

வாலில்லாத கமலைசால் ஜலங்கவிழ்க்க எவ்வளவு தூரம் மாடு முன் செல்ல வேண்டுமோ- அதற்கதிகமான தூரம் மாட்டை ஓட்டவே தூக்கு நிலை கம்பினை வளைக்கும்- தூக்கு நிலைகப்பி ஸ்தாபித கட்டையில் சால்மோதி கெடும். சால் ஜலம் கவிழ்க்கும்போது ஜலந்தங்கினால் வடக்கயிற்றை மெதுவாக இழுத்துவிடின் ஜலந்தங்க மாட்டாது- சால் தகர்ந்து கெடவுஞ் செய்யாது. தூக்கு நிலைகப்பியில் கோர்க்கும் வளையம். அளவிற்கதிகமானல் சால் மோதிதகரும்

தொடரும்,

வெ. ப. திருமலையப்ப முதலியார்,

வெள்ளகால் போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா-

---

## News & Notes—குறிப்புகள்

### ஒரு பெருந் திட்டம்-

### ஸ்ரீ பிரம்மன் பெரு முயற்சி-

அரபியாவிலுள்ள உலகில் பெரிய பாலைவனமாகிய சஹாராவில் பெரும் பான்மையான பாகமாகிய டுனீசா முதல் கேப்ஸ் குடா வரையிலுள்ள பிரஞ்சுக்காருக்குச் சொந்தமான பூமியைச் சாகுபடி செயயத்தக்க நிலமாகச் செய்வதற்கென அமெரிக்கா போஸ்டனைச்சேர்ந்த பிரசித்த தொழில் நிபுணர் ஸ்ரீ வைட் பிரமன் ஓர் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். இவர்தான் முன்னர் காலிபோர்னியால் இம்மாதிரியான ஏற்பாடு ஒன்றைச் செய்தவர். ஸ்ரீ பிரமன் தற்பொழுது கடல்மட்டத்திற்குத் தாழ்ந்துள்ள பாலைவனப் பிரதேசத்தில் கடல் நீரைப் பாய்ச்சி பூமியை ஈரமுள்ளதாகச் செய்யவிரும்புவதுமன்றி அட்லாஸ் மலையிலிருந்து ஓடும் ஆறுகளையும் தடுத்து பாலைவனத்தினிடையே ஓடச்செய்யவும் ஓர் திட்டம் தயாரித்துள்ளார். இப்படிச் செய்வதால் அங்கு மழை பொழிய சாதன மேற்படுவதுடன் சாகுபடி செய்யவும் ஜனங்கள் வசிக்கவும், துறைமுகங்கள் ஏற்படுத்தவும் சௌகரியம் ஏற்படுகிறது:

### புதிய உள் நாட்டுக் கடல்

பிஸ்காராவிற்கு 50 மைல் தெற்கிலுள்ள பூமிமுதல் 235 மைல் கிழக்காக சமுத்திரம்வரையுள்ள பூமியைஇவ்வாறு கடல் நீரைக்கொண்டு பாய்ச்சவதென அவர் திட்டம் தயாரித்திருக்கிறார், பிஸ்கரா கடல் மட்டத்திலிரு

க்கு 380 அடி உயரத்திலிருக்கிறது. ஆனால் சமுத்திரக்கரையின் மேற்குப் பக்கத்தில் பூமி சற்று பள்ளமாயிருக்கிறது. ஆதலால் கடலிலிருந்து 1200 கஜத்திற்கு அப்பால் 30 அடி ஆழம் ஜலம் தங்குமெனக் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. இப்போது மூழ்கடிக்க விரும்பும் பூமி 30,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது: இதன் மத்திய பாகத்தில் ஆழம் சுமார் 65 அடி முதல் 1000 அடி வரையிருக்கும். ஸ்ரீ பிரமன் கேப்ஸ் வளைகுடாவிற்கு மேற்கே 14 மைல் நீளத்தில் ஓர் கால்வாயும் வெட்டி கடல் மட்டத்திற்குக் கீழுள்ள பூமியில் கடல் நீரைப் பாய்ச்ச எண்ணியிருக்கிறார்.

இக் கால்வாய்கள் அங்குள்ள ஏரிகளுடன் இணைக்கப்படும். இவ்வேரிகளுக்கு அருகிலுள்ள பிரதேசங்கள் நல்ல வளம் பொருந்தியவை ஏரிகளிலுள்ள தண்ணீர் பாலைவனத்தால் வறண்டு போவதாலேயே இவை பயன்பட முடியாமல் போய்விடுகின்றன. அதனால் ஸ்ரீ பிரமன் இங்கு, 1890ல் சான்டிகோவில் கட்டியது போன்ற தண்ணீர் தேக்கங்களை ஏற்படுத்த விரும்புவது மன்றி ஆரவிற்கு வடக்காகச் சென்று மத்தியதரைக்கடலில் விழும் ஆறுகளையும் தடுத்து உள்நாட்டில் பாய்ச்ச விரும்பியுள்ளார்.

அலஜீரியா, டுனிஸ், மொராக்கோ இந்நாட்டுக் கவர்னர்கள் அனுமதியளித்துவிட்டால் சுமார் 20 தண்ணீர் தேக்கங்கள் ஏற்படுத்தலாகும். கடந்த 200 வருடங்களாக ஒன்றுமே முளையாமலிருந்த குன்றுப் பிரதேசங்களிலும் மரங்கள் வளர்க்கப்படும். இதனால் மாரிகாலத்தில் வெள்ளம் ஏற்பட முடியாது. இவ்வாறு வட ஆபிரிகாவை ஸ்ரீ பிரமன் ஓர் வசிப்பதற்குத் தகுதியான நாடாகச் செய்ய விரும்புகிறார்.

சோளம், கொள்ளு, பழவகைகள் முதலியன காலிபோர்னியாவில் பயிரிடப்படுவது போன்று இங்கும் பயிரிடப்படலாம். மேலும் பருத்தியும் கரும்பும் கூடப் பயிரிடலாகுமென ஸ்ரீ பிரமன் அபிப்பிராயப்படுகிறார். இப்பொழுது வீணாகவிருக்கும் நீர் வீழ்ச்சிகளிலிருந்து தண்ணீரின் சக்தியாலோடும் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தி ஆபிரிகா வாசிகளுக்கு மின்சாரமும், அதனால் சுகாதாரமும் அளிக்கவும், தீர்மானித்திருக்கிறார். இதனால் ஐரோப்பாவிற்கு ஏராளமான கோதுமை, சோளம், பார்லி, ஓட்ஸ் முதலிய தானிய வகைகளும் மாமிசம், கம்பளம், சாராயம் முதலியவைகளும் கிடைக்கக்கூடும்.

இத்திட்டத்தைக் காரியத்தில் கொண்டு வருவதில் பல புது முறைகள் அனுஷ்டிக்கப்படும். இனி ஐரோப்பியர்களும் குடியேறச் செல்வார்கள். இங்குள்ள அரபியர்களுக்கு விவசாயம், நீர்ப்பாசனம் சம்மந்தமான கல்வி போதிக்கப்படும். போக்கு வரவு சாதனங்களுக்கென புதுமாதிரி படகுகள் தயார் செய்யப்படும். ஸ்ரீ பிரமன் தமது திட்டத்தைப் பிரஞ்சு கவர்னர் மெண்டாருக்கு அனுப்பி அனுமதி கேட்டிருக்கிறார், பல பிரபலஸ்தர்கள்

இவர் திட்டத்தை ஆதரித்தான்னார், மேலும் டுனீஸா கவர்னருக்கும், அல்ஜீ ரியா கவர்னருக்கும் அத்திட்டம் அறிவிக்கப் பட்டிருக்கிறது. டுனீஸாவின் கவர்னர் தற்பொழுது அந்நாட்டு ஆரியர்களின் அபிப்பிராயங்களை அறிந்து வருகிறார். சீக்கிரத்தில் இதற்கென பலத்த ஏற்பாடுகள் செய்யப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

## மைசூரில் ஏலம் காப்பி, ரப்பர் பயிர் செய்ய நிலங்கள்.

மைசூரில் ஏலம், காப்பி, ரப்பர் முதலியவைகளைப் பயிர் செய்யும் நிலங்கள் அனுமதிப்பதில் தற்சமயமிருந்துவரும் விதிகளை மாற்றவேண்டுமெனக் கிருஷிகர்கள் அடிக்கடி கேட்டதின்பயனாக மைசூர் சர்க்கார் விதிகளை இப்பொழுது திருத்தி வெளியிட்டிருக்கிறார்கள். அடியிற்கண்ட நிபந்தனைகளின் பேரில் நிலங்கள் கொடுக்கப்படும்-

(1) நிலம் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து முதல் 5 வருஷம் வரைக்கும் கிஸ்தி கிடையாது. 6-வது வருஷம் முதல் ஏக்கர் 1க்கு ரூ 1—8—0 கிஸ்தி செலுத்த வேண்டும்.

(2) கிருஷி செய்வதற்குத் தன்னிடம் போதிய முதல் இருக்கிறதென்றோ அல்லது வேண்டிய பொருள் உண்டாக்கக் கூடும் என்றோ நிரூபிப்பவர்களுக்கே நிலம் கொடுக்கப்படும்.

(3) அனுமதிக்கப்பட்ட நிலத்தில் 5ல் 1 பங்கு ஆண்டு தோறும் அவசியம் கிருஷி செய்யப்படல் வேண்டும்.

(4) மரங்களையோ, காடுகளையோ வெட்டிவிட்ட பிறகு நிலத்தை வேண்டாமென்றாலும், காட்டில் ஏதேனும் ஒரு பாகத்தை மட்டும் ஏதோ வேலை செய்துவிட்டு மற்ற பாகங்களைச் சரியாய் விவசாயம் செய்யாவிட்டாலும் முதலாவது வருடத்திலிருந்து பூரா கிஸ்தியும் கொடுப்பதாகக் கட்டுப் பட்டு முச்சலிக்கா எழுதிக்கொடுக்கவேண்டும்.

(5) தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு அவர்களுடைய எஸ்டேட்டுகளின் அடுத்த நிலங்களைப் பங்களாக்கள், பாக்டரிகள் முதலியவைகள் கட்டும்படியாக டிப்டி கமிஷனர் தனது யுக்தம்போல் ஏலமில்லாமல் ஒரு விலை வைத்துக் கொடுக்கலாம்,

(6) காப்பித் தோட்டங்களுக்காக எடுக்கப் பட்டவர்கள் விண்ணப்பம் செய்தால் தீர்மானமாக ஒரு விலை வைத்து ஷியாருக்குக கொடுக்கலாம்:

திருவாங்கூரில் ஏலக் கிருஷிக்காக நிலம் அகப்படாது அநேகர் திண்டாடுகிறார்கள்- சர்க்காரும் நிலம் பதித்துக் கொடுக்கமாட்டேன் என்று பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிறது. ஐரோப்பியர்களைப் போல் ஏன் தென்னாட்டு விவசாயிகள் பலவிடங்களுக்குச் செல்லக்கூடாது? "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற மூத்தோரின் அமிர்தமொழியைக் கவனித்து நடப்பது நலம்,

# "கிருஷிகன்" பஞ்சாங்கம்

விபவஸூ மார்கழிமீ — சாலிவாகன 1850 கலியுகாதி 5029, பசலி 1338

கொல்லம் 1104, ஹிஜரி 1347 இங்கிலீஷ் 1928-டிசம்பர் 29ம்ஸூ ஜனுவரி

| ஜனுவரி | டிசம்பர் | மார்கழி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 15 | 1 | ச | திரு 23-38 | உத் 41-27 | சி 60 | கதிரறுக்க, உழ |
| 3 | 16 | 2 | ஞா | சது 26-10 | திரு 44-48 | அ 45 ம | விதைக்க |
| 4 | 17 | 3 | தி | ஞ் 27-25 | அவி 47-3 | சி 60 | நாகபஞ்சமி |
| 5 | 18 | 4 | செ | ஷ 27-26 | சத 49-5 | ம 60 | சம்பாசஷ்டி |
| 6 | 19 | 5 | புத | சப் 26-8 | பூரட் 47-55 | அ 48 சி | ஏற்றம்நட மாடுவாங்க |
| 7 | 20 | 6 | வி | ஷ் 23-45 | உத் 46-38 | சி 60 | கரிநாள் |
| 8 | 21 | 7 | வெ | நவ 20-17 | Cர 44-18 | அ 60 | ராஜதரிசனம் செய்ய |
| 9 | 22 | 8 | ச | தச 16-1 | அசு 41-31 | சி 60 | காலைவிருக்ஷம் நட |
| 10 | 23 | 9 | ஞா | ஏகா 11- | பர 37-59 | சி 60 | வைகுண்ட ஏகாதசி |
| 11 | 24 | 10 | தி | துவா 5-38<br>திர 54-12 | கர்*34 6 | ம 34 அ | கிர்த்திகைவிரதம் |
| 12 | 25 | 11 | செ | சது 54-4 | ரோ 30 2 | அ 30 சி | கரிநாள் |
| 13 | 26 | 12 | புத | ○ ப 48-19 | மிரு 25-57 | சி 60 | மாலேசிம்மாசன மேற |
| 14 | 27 | 13 | வி | பிர 42-57 | திரு 22-9 | ம 22 அ | ஆருத்ராதரிசனம் |
| 15 | 28 | 14 | வெ | துதி 38-6 | புன 18-41 | சி 19 ம | மகாம் சீமந்தம் |
| 16 | 29 | 15 | ச | திரு 33-48 | பூச 15-30 | சி 15 ம | மழைபெய்யலாம் |
| 17 | 30 | 16 | ஞா | சது 30-23 | ஆயி 13-44 | சி 13 ம | கிருஷ்ணபாதை விரதம் |
| 18 | 31 | 17 | தி | பஞ் 28-2 | மக 12-40 | ம 13 சி | மாடுவாங்க |
| 19 | 1 | 18 | செ | சஷ 27-26 | பூர 12-39 | சி 12 அ | சாஸ்திரம்பார்க்க |
| 20 | 2 | 19 | புத | சப் 29-49 | உத்ர 13:53 | அ 14 ம | காலை விதைக்க |
| 21 | 3 | 20 | வி | அஷ 28-10 | ஹஸ் 16 17 | சி 60 | தனியநாள் |
| 22 | 4 | 21 | வெ | நவ 30-45 | சித் 19-56 | சி 50 | காலைஆடுகள் வாங்க |
| 23 | 5 | 22 | சனி | தச 34-28 | சுவா 24,44 | அ 25 சி | தானியம் செலவிட உழ |
| 24 | 6 | 23 | ஞா | ஏகா 39- 8 | விசா 3 21 | ம 60 | சுபகாரியம் விலக்க |
| 25 | 7 | 24 | தி | துவா 44-32 | அநு 36.34 | சி 60 | கதிரறுக்க |
| 26 | 8 | 25 | செ | திர 49-33 | கே 43-0 | சி 43 அ | யந்திரம் கட்ட |
| 27 | 9 | 26 | புத | சது 54-41 | மூல 49- 17 | ம 49 அ | மாசசிவராத்திரி |
| 28 | 10 | 27 | வி | ● அ 59-15 | பூரா 55,2 | சி 60 | அமாவாசை விரதம் |
| 29 | 11 | 28 | வெ | பிர 60-0 | உத் 59 56 | சி 60 | தேவதா பூஜை செய்ய |
| 30 | 12 | 29 | சனி | பிர 2-58 | திரு 60-0 | சி 60 | போகிபண்டிகை |

# இரு கிருஷிகர்களின் சம்பாஷணை

ரங்கசாமி பிள்ளை:—ரெட்டியார் அவான்! நேற்றையதினம் சாயந்திரம் தங்களைக் காண்பதற்காகத் தங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். தாங்கள் வெளியில் போயிருப்பதாகச் சொன்னார்கள்.

பார்த்தயம் ரெட்டியார்:—ஆம் வாஸ்தவமே! நேற்று நடந்த கண்காட்சியில் பர்டிலைஸர் ப்ராப்பகாண்டாவால் நடத்தப்பட்ட ஒளி விசித்திரப் படக் காட்சியைப் பார்க்கச்சென்றிருந்தேன்.

ர. பிள்ளை:—அந்தக் காட்சியில் நடந்த விஷயத்தின் சாராம்சம் என்ன?

பா. ரெட்டியார்:—சொல்லுகிறேன். கேளுங்கள். உபன்யாஸம் செய்தவர் சொன்னதாவது. சாணி யெருவைவிட சிறந்த எருவே உலகத்தில் இல்லை யென்றும், நல்ல சாணியெரு கிடைக்காததால் ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ் பேட் முதலிய செயற்கை உரங்களை உபயோகிக்க வேண்டுமென்றும் இவ்விதம் இச்செயற்கை உரஙகளை உபயோகித்தால் நிலத்தின்கண்டு முதலை அதிகரிக்கச் செய்யலாம் என்றும் சொன்னார். இத்துடன் பர்டிலைஸர் ப்ராப்பகாண்டா ஆப் இந்தியா லிமிடெட் என்னும் கம்பெனியாரின் பிரதிநிதிகளும் பிரசாரகர்களும் நம்முடைய நிலங்களைப் பரிசோதித்து அவைகளினுடைய இயல்புக்குத்தக்கவாறு உரஙகளைச்சிபார்சு செய்கிறார்கள். இவர்கள் விவசாய இலாகாவின் கொள்கைக்கு ஏற்றவாறு உரங்களைச் சிபார்சு செய்கிறதனால், அநேகமாய்எல்லா மிராசுதாரர்களும் இவர்களுடைய உரங்களை வாஙகுகிறாகள் என்றும் எடுத்துக் காட்டினார். சல்பேட் ஆப் அம்மோனியா ஸூபர்பாஸ்பேட் முதலிய உரங்களை இந்திரிய வஸ்துக்களுடன் கலந்து உபயோகிப்பதால் கிடைக்கும் ஜாஸ்திமாகுலை படங்கள் மூலமாய்க் காண்பித்தார்கள்; ஐக்கிய விவசாயச் சங்கங்களின் நிரூபணைப் பண்ணைகளில், எல்லா அபிவிருத்திகளுடன் இவ்வுரஙகளையும் உபயோகிப்பதால் கிடைத்த அதிகமாகுலைப்படஙகள் மூலமாய் செவ்வனே விளக்கிக் காண்பிக்கப்பட்டன.

ர. பிள்ளை:—இவ்வுரங்களை உபயோகிப்பதால் நிலத்தின் தன்மை கெட்டு விடுகிறதென்றும் இவ்வுரங்களை உபயோகித்தால், ஜீவாதாரத்திற்கு உரிவான பிராணுபிவிர்த்தனி (வைட்டாமின்) என்னும சத்துஇல்லாததனால், இவ்வுரங்களின் பயனாகக் கிடைத்த தானியங்களை உண்பது சக்கைக்குச் சமானமென்றும் சிலருடைய அபிப்பிராயம்:

பா. ரெட்டியார்:—விவசாய இலாகாவின் அதிகாரியான டைரெக்டர் துரையவர்கள், அவாகள் செய்யும் பிரசஙகங்கள் தோறும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் வழக்கமாய் உபயோகிக்கும் தொழு எருவில பாதியுடனாவது அல்லது மூன்றில் ஒரு பஙகுடனாவது உபயோகிக்கும்படிச் சொல்லுகிறார்கள் அல்லவா? இவ்விதம் இயற்கை உரங்களையும் செயற்கை உரஙகளையும கலந்து உபயோகித்து தற்கால விலைநிலைமை, கால வேறுபாடுகள் முதலியவற்றிற்குத் தக்கவாறு பயிரிடுவது ஒவ்வொரு மிராசுதாரின் கடமையென்றும் வற்புறுத்தினார்கள். இனி நாம் அவருடைய புத்திமதிகளுக் கேற்றவாறு நவீன விவசாய முறைகளையே கையாட வேண்டும். இன்றுமுதல்செயற்கை உரஙகளை நாம் அதிகமாக வாங்க வேண்டும்.

ர. பிள்ளை,— நீங்கள் சொல்வதிருக்கட்டும். புஸ்தகத்தைப் படித்து விட்டு உபன்யாசம் செய்யும் இவர்கள் பேச்சை நம்பிச் செய்வது "எட்டுச் சுரைக்காய் கறிக்குதவும்" என்று நினைப்பது போலல்லவா இருக்கிறது. இவர்கள் சொற்படி நாம் பயிரிடுவோமானால், நமக்கு ஏதாவது மிஞ்சுமா?

பா. ரெட்டி:—நன்றாய்க் கேட்டீர், நான் இதற்கு முன் எனக்குக் கிடைத்த சாணி எருவை என் நிலங்களில்பாதிக்கு உபயோகித்து, பாதிக்கு எருப் போடாமலே பயிரிடுவது வழக்கம். பார்டிலைஸர்ப்ராப்பகாண்டாவின்பிரசாரகர்கள் சொற்படிக்கு நான் 3 வருஷக்காலமாய் எனக்குக் கிடைக்கும் சாணியெருவை என் நிலங்கள்பூராவிற்கும் உபயோகித்து, இவைகள் எல்லாவற்றிற்கும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்து வருகிறேன். இத்தனை வருஷமாய் எனக்குக் கிடைத்துக் கொண்டிருந்த லாபத்தை விட இப்பொழுது இரண்டு பங்கு கிடைக்கிறது. அப்படியிருக்கையில் நாம் ஏன் இவ்வுரங்களை உபயோகிக்கக்கூடாது? இது மாத்திரமல்ல, நான் சாணி யெருவிலும் கொஞ்சம் உபயோகிப்பதனால் நிலத்தின் தன்மையும் விருத்தியாகிறது. ஆகவேஇப்பொழுதாவது நீர் திருப்தி யடைந்தீரா?

ர. பிள்ளை—அதிருக்கட்டும், நம்மைப்போன்ற சுதேசிகள் அயல் நாட்டிலிருந்துவரும் வஸ்துக்களாகிய ஸல்பேட் ஆப்அம்மோனியாமுதலியவைகளை வாங்குவது தர்மமாகுமா?

பா ரெட்டியார்—நன்றாய்ச் சொன்னீர். நீர் சொன்னவை யாவும் தெரியாத்தனத்தால் என்று நினைத்து நான் வருத்தப்படுகிறேன். நம் தாய்நாட்டிலேயே வங்காளம், முதலிய அநேக மாகாணங்களில் ஸல்பேட் ஆப் அம்மோனியாவை ஏராளமாக உற்பத்தி செய்கின்றார்கள். இப்படியிருக்கையில் இவைகள் அயல் நாட்டுச் சாமான்கள் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

ர. பிள்ளை—இப்பொழுதுதான் எல்லா விஷயங்களும் நான்தெரிந்து கொண்டேன். ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ்பேட் முதலிய உரங்களைப்பற்றிய விலைவிபரமும், இவைகள் கிடைக்கும் இடங்களும் இவைகளை உபயோகிக்க வேண்டிய முறை அளவு காலம், முதலியவைகளும் யாரைக் கேட்டால் தெரியவரும்?

பா. ரெட்டியார்—சென்னை அரமனைக்காரத் தெருவிலுள்ள ப்ரன்னர் மாண்ட் கம்பெனியார்களுக்காவது அல்லது பற்பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான டெப்போக்களுக்காவது, உமக்கு ஸமீபத்திலுள்ள மேற்படி கம்பெனியார்களின் பிரசாரகர்களுக்காவது எழுதினால் அவர்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். தவிர ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்த மிராசுதார்களின் அபிப்பிராயம் என்னும் இப்புஸ்தகத்தை ஒரு முறை படிப்பீரானால் உம்முடைய சந்தேகம் எல்லாம் பறந்துவிடும்.

ர. பிள்ளை—உம்மால் இன்று அநேகவிஷயம் தெரிந்துகொண்டேன், இனி நான் இவ்விதமே செய்கிறேன். எனக்கு நேரமாய் விட்டபடியால் நான் போய் வருகிறேன் வந்தனம்.

பார்டிலைஸர் ப்ராபகாண்டா,
ஆப் இந்தியா லிமிடெட்,
தபால்பெட்டி 130 மதராஸ்

(விளம்பரம்)

## The Journal of the Madras Agricultural Students' Union.

A monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign. Subscription per annum Rs Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U. Journal.

AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O. *Coimbatore*

---

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வமுடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது.

இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு அ சுப்பரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில்எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தமகுணப்பெண்ணின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

---

## விவசாயப் புத்தகங்கள்

| | ரூ அ பை |
|---|---|
| விவசாய விளக்கம் | 1—4—0 |
| நெல் | 1—0—0 |
| கரும்பு | 1—0—0 |
| மா | 0—7—0 |

தபால் சார்ஜ் வி பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு

பென்ஷன்ட் விவசாய இன்ஸ்பெக்டர்

பெரியபாளையம், பொன்னேரி மார்க்கம்.


---


Printed and Published by J-R- Ranga Raju at the Raju Press Jagannadha Baugh Saidapet (MADRAS)